மரபின் மேன்மை - 3

# இசையும் மரபும்



709.24
சண்மு

த. சண்முகசுந்தரம்

# இசையும் மரபும்

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

த. சண்முகசுந்தரம்

வெளியீடு :
**கலைப்பெரு மன்றம்**
அம்பனை
தெல்லிப்பழை
இலங்கை

# ISAIYUM MARAPUM

A collection of Interviews with three reputed Artistes of Jaffna.

709.24
கண்(டு)

முதற்பதிப்பு:
மார்கழி 1974
உரிமை ஆசிரியருக்கே

*by*
T. Sanmugasuntharam

INSTITUTE
REFERENCE LIBRARY
EVELYN RUTNAM
108
2045

*Printers:*
KUGAN PRESS
TELLIPPALAI
SRI LANKA

*Publishers:*
KALAIPERUMANRAM
AMPANAI
TELLIPPALAI
SRI LANKA

# முகவுரை

கலை மரபுகளின் மேன்மைகளைக் காலவெள்ளம் அடித்துச் செல்லாமல் காப்பாற்றும் அரிய முயற்சி போற்றத்தக்கது. இந்தத் துறையில் உழைத்து வருபவர் எமது நூலாசிரியர் திரு. த. சண்முகசுந்தரம். இவர் எழுதிய 'கலையும் மரபும்' என்ற நூலை முன்னர் வெளியிட்டோம். அதனைத் தொடர்ந்து 'இசையும் மரபும்' என்ற நூலை வெளியிடுகின்றோம். இந் நூலின் நாயகர்களாக விளங்குபவர்கள் நாதசுரக் கலைப்பேராசான் மாவிட்டபுரம் இராசா, பண்ணிசைப் பெரும்புலவர் கிரிமலை செல்லையா, தவிற் கலைப் பேராசான் மூளாய் ஆறுமுகம். இவர்களைக் கௌரவிப்பதில் அம்பனைக் கலைப்பெரு மன்றம் பெருமைப்படுகின்றது.

ஆ. சிவநேசச்செல்வன்
தலைவர்
கலைப்பெரு மன்றம்

பாவலர் துரையப்பாபிள்ளை வீதி
அம்பனை
தெல்லிப்பழை

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இசையும் மரபும் | 1 |
| நான் கற்றவை மற்றவருக்குஞ் சுவறவே முருகன் எனக்கு வித்தையைத் தந்தான் | 5 |
| பண்ணும் கூத்தும் இந்த மண் இருக்கும்வரை நிலைத்திருக்கும் | 17 |
| அப்பனைச் சேவிக்கிறேன். செப்பமாகத் தவில் வித்தையைப் போதிக்கிறேன் | 25 |

# இசையும் மரபும்

காலஞ்சென்ற மாவிட்டபுரம் நாதசுர வித்துவான் நா. சோ. பக்கிரிசாமி மிகவும் சுவையாகப் பேசுவார். இவரிடம் சிறுவர்களாகிய நாங்கள் சென்று, ''தாத்தா! ஒரு கதை சொல்லுங்கள்,'' என்று கேட்போம். அவரும் அலுக்காமல் வேளைக்குவேளை பல கதைகளையும் சொல்வார். தேவாரம், திருவாசகம் எல்லாவற்றையும் மிகவும் அழகாகப் பாடுவார். அவர் சொன்ன கதையில் ஒன்று இன்றும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. நாதசுர வித்துவான் ஒருவரை நடுநிலையாக வைத்து நெடுங்கதை ஒன்றை எழுதினேன். அதில் தாத்தா சொன்ன கதையையும் அப்படியே சேர்த்துவிட்டேன். இந்த நெடுங்கதை, பழையூர் திரு. கு. சுந்தரம்பிள்ளையை ஆசிரியராகக்கொண்ட ''சிலம்பொலி'' யில் 1971இல் வெளிவந்தது. கதை முடியுமுன்னர் ''சிலம்பொலி'' அடங்கியது. ஈழத்துத் தமிழ்கூறும் நல்லுலகம் கொடுத்த ஆதரவு அவ்வளவுதான். வித்துவான் பக்கிரிசாமி கூறிய கதை இதுதான்.

''மாவிட்டபுரம் இசையாளர் பரம்பரைபற்றி ஒரு கதை உண்டு. முன்னொருகாலத்திலே கலைஞானியார் என்று ஒருவர் இருந்தார். இவர் ஒருநாள் தஞ்சைப் பெரியகோயிலுக்குப் போயிருந்தார். ஆடல்வல்லானை வணங்கியபின்னர் பொற்காசு பலவற்றைக் காணிக்கையாகச் செலுத்தினர்; ஆனல் பெரும் தவறு ஒன்றையுஞ் செய்தார். கோயிலுக்குச் சொந்தமான நாதசுரம் ஒன்றைக் களவாக எடுத்துத் தன் கைப்பையிலே போட்டுக்கொண்டு ஈழநாட்டிற்கு வந்துவிட்டார். இசையிலே ஏற்பட்ட பெரும் மதிப்புக் காரணமாகவே அவர் அப்படிச் செய்தார். ஈழத்திற்கு வந்தபின்னர் தன் தவறை நினைந்து உருகினர். ஆடல்வல்லான் அவருக்குக் கனவிலே தோன்றினன்.

''ஞானியாரே! பயப்படவேண்டாம். நீர் வாழுகின்ற பகுதியில் எமது தமிழ்க்குழந்தை முருகனுக்கு ஓர் ஆலயம் எழும்பப் போகின்றது. அதுவரையும் இந்தக் குழலைக் கவனமாக வைத்திருக்கவும். இந்தக் குழல்மூலம் இசை பொழியக்கூடிய பரம்பரை ஒன்று அந்தக் கோயிலில் உருவாகும்'', என்று கூறி மறைந்தான்.

"அந்தப் பரம்பரையிலேதான் நான் பிறந்தேன். இசைக்கும் சுருதிக்கும் எவ்வளவு தொடர்புள்ளதோ அவ்வளவு தொடர்பு எமக்கும் வறுமைக்கும் உண்டு".

இதுதான் கதை. இதனை உண்மையில் இன்று நான் உருவகக் கதையாகவே கொள்கின்றேன். இந்த நூலுக்கு "இசையும் மரபும்" என்ற பெயர் பொருந்துமோ என்ற கேள்வியைத் தொடுக்க யாராவது முன்வரலாம். அதற்கு மறுமொழி இலகுவிற் கூறலாம். ஈழத்தில் யாழ்ப்பாணத்து அரசு 1618 வரை சுதந்திரமாக இருந்தது; பின்னர் போர்த்துக்கேயர்வசம் மாறியது. கோட்டை இராச்சியம் 1505 தொடக்கம் படிப்படியாகப் போர்த்துக்கேயருக்கு இரையானது. தவளையைப் பாம்பு விழுங்குவது போன்றதே கோட்டையைப் போர்த்துக்கேயர் விழுங்கிய கதை. கண்டி இராச்சியம் 1815இல் ஆங்கிலேயருக்குத் தன் சுதந்திரத்தைப் பறிகொடுத்தது. கலைகளுக்கு ஆதரவு கொடுத்த இலங்கை அரசர்கள் இல்லாத காலம் வந்தது. நிலமானியப் பிரபுக்களும் தலைமைக்காரர்களும் கலைகளுக்கு ஆதரவு கொடுத்தனர். வெறும் ஆதரவு கொடுத்தால்மட்டும் போதாது. கலையை வளர்க்கக் கலைஞர்கள் தேவை. அந்தக்காலத்திற் பொது மக்களோடு ஒட்டி உறவாடி வாழ்ந்து இசைக்கலைக்குத் தொண்டு செய்தவர் இருசாரார். இந்த இரண்டுசாரரும் ஈழத்துக் கலை வாழ்வில் இரண்டு கண் போன்றவர். இவர்களுக்கு மரியாதை செய்யவே இந்த நூல் உருவாகியது. இங்கு குறிப்பிடுகின்ற இருசாரார், நாதசுரக் கலைஞரும், வீரசைவர் குலத்து வந்த கலைஞரும் ஆவர். இந்த இரண்டுசாராரும் இல்லாவிட்டால் இன்று ஈழத்துக் கலைவயலுக்குப் பதிலாகக் கட்டாந்தரை ஒன்று உருவாகியிருக்கும். இது உண்மை; மிகைபடுத்திய புகழுரை இல்லை. இவர்கள் ஈழத்தின் கலைவாழ்விற்குச் செய்த பெருந் தொண்டு ஏட்டிலடங்கா. "மரபின் மேன்மை" என்ற தொடரில் "கலையும் மரபும்" என்ற நூலை வெளியிட்டேன். இத் தொடரில் இரண்டாவதாக "கல்வியும் மரபும்", என்பது இடம் பெறுகின்றது. மூன்றாவதாக இதனை வெளியிடுகின்றேன்.

முதலில் நாதசுரக் கலைஞர்கள் பரம்பரையைச் சேர்ந்தவர் தமது வாத்திய இசைமூலம் ஆற்றிய தொண்டை ஆராயலாம். தேவாரம், திருவாசகம், திருப்புகழ், கீர்த்தனம் எல்லாம் இன்று எல்லோர்க்குந் தெரிந்தவை. இவை பனை ஏட்டு வடிவத்தில் இருந்தகாலம் ஒன்று உண்டு. அச்சுக்கலை வளராத காலம் அது. அந்தக் காலத்தில் இந்த இசையாளர்கள் தமது வாத்தியம் மூலம் தமிழ் இசைக்கு உயிர் கொடுத்துக் கோயில் வீதிகளில்

" அப்பனைச் சேவித்தனர் ". இசைத்தட்டு, ஒலிப்பதிவு ஆகியவை கள் இல்லாத காலத்தில் வர்ப்பாட்டுமூலம் இசையை வளர்த் தனர். இசையை முறையாகச் சொல்லிக்கொடுத்தனர். நாடகத் தில் ஈடுபட்டு நாடகக் கலையை வளர்த்தனர். பரதக்கலையைக் காப்பாற்றினர். இன்னும் இசையைப் பரப்புபவர்கள் இவர்களே.

இரண்டாவதாக, வீரசைவர் குலத்தவர் தமிழ்க்கலைக்கு ஆற்றி வருகின்ற தொண்டை நோக்கலாம். பண்ணிசையைப் பரப்பிய வர்கள் இவர்கள். தேவாரம், திருவெம்பாவை, திருப்புகழ் எல்லா வற்றையும் வீதிகள்தோறும் பரப்பியவர்கள் இவர்கள். கரகம், காவடி, கூத்து போன்ற கலைகளை ஓங்கி வளரச்செய்தார்கள் இவர்கள். தெய்வீகச் சோடினைக் கலையாம் சப்பறம், காவடி, தண்டிகை எல்லாம் இவர்கள் போற்றி வளர்த்த கலைகள். பூசாரிகளாக இருந்துவந்த இவர்கள் உடுக்குப்பாட்டுக் கதையைப் பேணிவைத்தனர். பொதுமக்களுடைய கிராமியக் கோயில்களில் பத்திநெறியை வளர்த்தவர்கள் வீரசைவர்கள்.

இந்த இரண்டுசாராரிலும் பலர் வாத்தியங்களைப் பயின்றும் கூத்துப்பழகியும் கலையை வளர்த்தனர். பலர் அண்ணாவிமாராக வுந் திகழ்ந்தனர். செல்லரித்த ஏட்டிலிருந்த தமிழ்க்கலைக்கும் இசைவடிவங்களுக்கும் வலிவும், வனப்பும், பொலிவும், இனிப்புங் கொடுத்தவர்கள் இவ்விருசாரார். இவர்களுடைய தலையாய தொண்டையும் பெருமையையும் ஈழநாடு உணரவேண்டும்; உணர்ந்து மதிப்புக் கொடுக்கவேண்டும்.

பாரம் இழுக்கின்ற எருதின் கதையாகக் கலைஞர்களின் வாழ்க்கை அமையக்கூடாது. எருது நுகத்திலே பூட்டப்படுகின்றது. பாரம் இழுக்கின்ற பருவத்தில் எருதுக்குத் தவிடும் பிண்ணாக்கும் வைக்கோலும் அடியும் உதையும் நிறையக் கிடைக்கின்றன. எருது கிழடு தட்டுகின்றது. வளர்த்தவர் அதனைக் கவனியாமல் விட்டுவிடுகின்றனர். வரட்டு நிலத்தில் புல்தேடிக் கிழட்டு எருது அலைகின்றது. ஈழத்திற் கலைஞர்கள் பலரும் எருதைப்போலவே நடாத்தப்படுகின்றனர். சற்று விழிப்புற்ற எமது சமுதாயம் கலைஞர்களுக்குச் சிறிது மதிப்புக் கொடுத்து வருகின்றது. முழுமை யான மதிப்பு இவர்களுக்குக் கிடைக்கவேண்டுமானால் உண்மை யான மக்களாட்சி இந்த நாட்டிலே வளரவேண்டும். அப்படி யானால் கலைஞர்களுடைய இளமையும் முதுமையும் பொலிவாக அமையும்.

தென்னிலங்கையிலிருந்து கிளம்பிய சோகக் கதையொன்று என் உள்ளத்தைப் பெரிதும் உறுத்தியது. கண்டி நடனத்தின்

சிகரம் குருமான்சே குணயா. இவர் முதுமையாலும் வறுமையாலும் வாடினுர். தன்மானம் நிறைந்தவர் இக் கலேஞர். அரசைப் பார்த்து இவர் புண்ணியக்காசு கேட்கவில்லே. ''எனக்கு நிலம் கொடுங்கள்; பயிர்செய்வேன். பயிர்ச்செய்கைதான் என் பரம்பரைத் தொழில்,'' என்றுர் ஒருமுறை. இந்தக் கலேஞரின் திறமையைப் பயன்படுத்தியவர் பலர். இந்தமாதிரியான நெஞ்சை உருக்கும் கதைகள் எமது நாட்டிலிருந்து அறவே ஒழியவேண்டும். மக்கள் அரசுதான் மக்கள் கலேஞர்களுக்கு மதிப்பு வழங்கும். செல்வச்சீமான் ஒருவரின் அன்புக் குழந்தை அரைகுறையாகப் பரதத்தைப் பயின்று அரங்கேறுகின்றது. செல்வச்சீமான்கள் நடாத்தும் செய்தித்தாள்கள் கொட்டை எழுத்துமூலமும் புகைப் படமூலமும் இந்த அரங்கேற்றங்களுக்குப் புகழ் பாடுகின்றன. மக்கள் கலேஞர்களின் புகைப்படங்கள் தப்பித்தவறி வெளி வருகின்றன. அதுவுஞ் சிறிய அளவிலேதான். இந்த நிலே முற்றுக மாறவேண்டும்.

மக்களே மகிழ்வித்த கலேஞர்களே இங்கு பேசவைத்துள்ளேன். மக்கள் கலேகளின் மதிப்பு வளரட்டும். கலே மரபுகளே மக்கள் அறியட்டும். மரபிலே மகிமையுண்டு என்பதை எல்லோரும் உணரட்டும். இதுவே இந்த நூலின் நோக்கம்.

தொழுது தொழுது மகிழ்வேன் — பின்
எழுதி எழுதி மகிழ்வேன்.

❋



நாதசுர இன்னிசைப் பேராசான்
மாவிட்டபுரம் சு. க. இராசா

# "நான் கற்றவை மற்றவருக்குஞ் சுவறவே முருகன் எனக்கு வித்தையைத் தந்தான்"

**மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீன நாதசுர வித்துவான், இன்னிசைப் பேராசான் சு. க. இராசா அளித்த நேர்முக உரையின் தொகுப்பு. இதுவரை ஈழத்தில் நாதசுரக் கலைஞர்கள் ஐம்பது பேரை உருவாக்கியுள்ளார் இவர். தான்பெற்ற கல்விபற்றியும் தான் சொல்லிக்கொடுக்கின்ற கல்விபற்றியும் இங்கு கூறுகின்றார்.**

இந்த ஆனந்த ஆண்டு ஆடித் திங்கள் ஐந்தாம் நாள் (21-7-74) ஆனந்தமான நாள். அன்று மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயிலில் ஒரு தனிப்பொலிவு. புதிதாகப் பூங்காவனத் திருவிழாவை இந்த ஊர் இளைஞர்குழாம் தொடக்கிவைத்தது" இந்த இளைஞர்கள் ஒருநாள் மாவை ஆதீனகருத்தரின் வீட்டை நோக்கிப் படையெடுத்தனர். இருபத்தாறும் திருவிழாவாகப் "பழம் நீ" என்கின்ற மெய்ப்பொருளை உணர்த்துகின்ற மாம் பழத் திருவிழா இதுவரையும் அமைந்திருந்தது. இருபத்தேழாம் திருவிழாவாகப் பூங்காவனத் திருவிழா அமையவேண்டும் என்பது இளைஞரின் கோரிக்கை. என்றும் பொலிவுடன் விளங்குகின்ற மாவை ஆதீனகருத்தர் அருமறையாளர் அந்தணர் திலகம் சு. துரைசாமிக்குருக்கள் "ஆம்", என்று தலையை அசைத்தார். "கந்தன் கருணை எல்லாம்", என்ருர். இளைஞர்களின் ஆரவாரத் திற்குக் குறைவு இல்லை. முதியவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பூங்கர்வனத் திருவிழா ஒழுங்குகளை எல்லோரும் ஓடி ஆடிச் செய்தனர்.

பூங்காவனத் திருவிழா தொடங்கியது. தாத்தாவான நாத சுர வித்துவான் இராசாவும் இத் திருவிழாவில் சேவகஞ் செய்ய வந்திருந்தார். இளமைத் துடிப்புள்ள இணுவில் நாதசுர வித்து வான்கள் கோ. கானமூர்த்தி, கோ. பஞ்சமூர்த்தி ஆகிய சகோ தரர்களும் இராசாவிற்கு வலக்கைப் பக்கமாக இருந்தனர். இரா சாவிற்கு இடப் பக்கமாக இளம் வித்துவான் கணேசன் இருந் தார். தவிலுடன் பொலிவாக இருந்தார், நாதசுரத்துக்கெனத் தவில் வாசிக்கப் பிறந்த நாச்சிமார்கோயில் க. கணேசபிள்ளை.

இவருடன் இளம் தவில் வித்துவான் கிருஷ்ணமூர்த்தியும் இருந் தார். நாதசுர இசைக் கலைக்கு இராசாவான முதுமையின் சாயல் படர்ந்த இராசா தன் வாத்தியத்தைக் கையில் எடுத்தார். இராசாவைத் தெரியாதவர்கள், "இந்தத் தாத்தா துடிப்புள்ள இளம் வித்துவான்கள் மத்தியில் என்னதான் செய்யப்போகின் ருர்?," என்ற கேள்வியைக் கிளப்பியிருப்பார்கள். இராசா வைத் தெரிந்தவர்கள் இப்படியான கேள்வியைக் கிளப்பமாட் டார்கள்; காரணம் இவர்களுக்கு இராசாவைத் தெரியும்; அவரின் வாத்தியத்தைத் தெரியும்; அவரின் கைவிரலின் திறமையைத் தெரியும்; மூச்சின் பெருமையைத் தெரியும். இராசாவின் வாத்தியத்திலிருந்து தோடி இராகம் அருவிபோலப் பாய்ந்து ஓடியது. இராக ஆலாபரணம் நடந்தது. "இவரிடம் இருந்து நிறையக் கற்க இன்னும் உண்டு," என்ற பாணியில் இராசாவின் சீடர்களான வித்துவான்கள் கானமூர்த்தியும் பஞ்சமூர்த்தியும் கேட்டுக்கொண்டு இருந்தனர்; இருந்து கவனமாகக் கேட்டனர். கச்சேரி இனிது நடந்தது. பண்பும் தூய்மையும் உடைய இராசா தன் வாத்தியத்தை வைத்தார். தன் சீடர்களான மூர்த்தி சகோதரர்களைப் பார்த்து அன்புடன் ஏதோ சொன்னுர். உடனே "மருதமலை மாமணியே" என்ற இன்னிசைப் பாடல் இச் சகோதரர்களின் வாத்தியத்திலிருந்து தேனுகப் பாய்ந்தது. விறுக்கான இளம் வித்துவான்களுடைய வாத்தியம் சோபிக்கட்டும் என்று இராசா தன் வாத்தியத்தை வைத்துவிட்டார். கணேச பிள்ளையின் தவில் தனக்குரிய சிறப்புடன் இசைமழையிற் பேசியது. பாட்டு வாசிப்பு முடிந்தது. தவிற்கச்சேரி நடந்தது, இராசா இருந்து தாளம்போட்டார். பின்னர் வந்த இளம் தவில் வித்துவான்களை உற்சாகப்படுத்தினுர். உண்மையான இராசாவை - கலைஞர் இராசாவை - அறிய இந்தக் கச்சேரியில் நடந்தவை போதும்.

இந்த நாதசுர வித்துவானிடம் இசையாளர் கல்வி மரபுகளைப் பற்றிக் கேட்டறியலாம் எனப் போனேன். நாளும் தினமும் இராசாவைக் காண்பவன் நான். முதுமையை எட்டிக்கொண்டு இருக்கின்ற இராசாவிடம் பழமையைப்பற்றிக் கேட்டேன். பழைமையைப்பற்றிக் கேட்டபோது அவர் பேச்சில் இளமை எதிரொலித்தது. அவர் புத்தொளி பெற்ருர். 'மட மட,' என்று பேசினுர் பழைமையைப்பற்றி. அந்தப் பேச்சுக்களைத் தொகுத்து எழுதுவதானுல் ஒரு புத்தகமாக அமையும். காகிதப் பஞ்சம் நிலவுகின்ற இந்தக்காலத்தில் இது வீண் கனவு. "நீங்கள் இசையைக் கற்ற முறையையும் கற்பிக்கின்ற முறையையும் பற்றி விபரமாகச் சொல்லுங்கள்," என்றேன். "முருகா! வள்ளி

மணாளா!'' என்று சொல்லிப் பேச்சைத் தொடக்கினார். இவரை மேலும் பேசவைப்பதற்கு வழி, குழந்தைவேலுவைப்பற்றிக் கேட்பதுதான் என்பது எனக்குத் தெரியும். இந்த உத்தியைக் கையாண்டேன். குழந்தைவேல் இராசாவின் தமையன். அத்துடன் முதற்குருவும். மூன்றுமணிநேரம் இராசா பேசினார். "நாளைக்கு வருகின்றேன். எல்லாவற்றையும் மனதிலே நிரைசெய்து வையுங்கள். கட்டுரை வடிவாக்கவேண்டும்,'' என்றேன்.

"ஓம், ஓம், தம்பி. கோயில் மாலைப் பூசை முடிந்ததும் வாரும். ஆண்டு முழுவதும் பூசை காண்பது இந்தக் கிழவனின் வழக்கம்,'' என்றார். மறுநாள் இரவு போனேன். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வீதியில் வாழ்கின்ற இராசா, கோயிலால் வந்து எனக்காகக் காத்திருந்தார். நான் பேச்சைக் கொடுத்தேன்.

"முதலில் உங்கள் இளமையைப்பற்றிப் பேசுங்கள். பள்ளிப் படிப்பு, வித்தைப் படிப்பு விபரம் எல்லாம் நிரையாகத் தேவை. நாதசுர வித்துவான் நா. சோ. உருத்திராபதி, உங்கள் தமையனார் குழந்தைவேல் பற்றிக் கூறியவை உங்களுக்கு நினைவிருக்கின்றனவா?'' என்று கேட்டுவிட்டு அந்தப் பகுதியை வாசித்தேன்.

"எனது காலத்தில் பெரும் வித்துவானாகத் திகழ்ந்த கே. இராசாவின் தமையனார் குழந்தைவேல், கற்றுத்தேறிய இசை வல்லாளர். தன் காந்தசக்தி வாய்ந்த வித்தையால் சபையைக் கவர்ந்தவர். அண்மையிற் காலமானார்''† இதனைக் கேட்டதும் இராசா எழுந்துவிட்டார்.

"தம்பி! என் தமையனார் காலமாகவில்லை. இன்றும் என் நெஞ்சத்தில் வாழ்கின்றார். அவர் அன்று எனக்குச் சொல்லிக் கொடுத்தவைகளை இன்று நான் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்றேன். நான் கற்றவை மற்றவர்களுக்குச் சுவறவே முருகன் எனக்கு வித்தையைத் தந்தான். முருகா துணை. குருவே துணை''. இராசா உருகினார். பேசத்தொடங்கினார்.

"எமது குடும்பமெல்லாம் மாவிட்டபுரம் ஆதீனத்தைச் சேர்ந்தவை. எமது பரம்பரை பூர்வீகத்தில் திருப்புகலூரைச் சேர்ந்தது. எமது குடும்பமே இசைக் கல்லூரியைப் போன்றது. எமது தாயாருக்கு நாம் ஆறு குழந்தைகள். தாயாரின் பெயர் சுப்புக்குட்டி. சிறந்த வாய்ப்பாடகி. சிதம்பரத்தில் கச்சேரி செய்திருக்கின்றார். அங்கு சிலகாலம் வசித்தவர். பெரும்

---

† "கலையும் மரபும்" — பக். 9, த. சண்முகசுந்தரம்

வித்துவானகத் திகழ்ந்த குழந்தைவேல் மூத்தவர். இவருக்கும் எனக்கும் சுமார் இருபது வயது வித்தியாசம். நான் சிறுவனாக இருக்கும்போது இசையின் மத்தியில் வாழ்ந்தேன். எனது மற்றத் தமையனார் தவில்வித்துவான் துரைச்சாமி. இவர் அகால மரணமடைந்தார். எமது குடும்பத்தைச் சேர்ந்த வேறு பல வித்துவான்களும் வந்து போவார்கள். பேச்செல்லாம் மூச்செல்லாம் இசை மயமாகவே இருக்கும். இவர்களிற் பலரின் நினைவு இன்னும் என் உள்ளத்தில் இருக்கின்றது. இந்த நினைவு ஆழமாகப் படிந்துள்ளது. ஈழத்து நாதசுர வித்துவான்கள் சு. அமிர்தலிங்கம், மு. மாணிக்கம் போன்றவர்கள் அடிக்கடி வருவார்கள். இந்தியாவிலிருந்து வந்த நாதசுர வித்துவான்கள் முத்துக்கிருஷ்ணன், சண்முகசுந்தரம் போன்றவர்களும் எமது வீட்டிலிருந்து சேவகஞ் செய்தவர்கள். ஈழத்துத் தவில் வித்துவான்கள் இணுவில் பழனிவேல், - பெரிய பழனி - வ. சந்தணம் கி. விசுவலிங்கம் போன்றவர்களும் வருவதுண்டு. இந்தியாவிலிருந்து வந்த தவில் வித்துவான்கள் வைத்தீஸ்வரன் கோயில் சுவாமிநாதன், வலங்கைமான் கோவிந்தசாமி, இராமேசுவரம் சேதுராசா போன்றவர்களும் தமையனாருடன் இருந்து சேவித்தனர். இந்தச் சூழ்நிலையில் இருந்து வளர்ந்த எனக்கு வித்தை தானாகவே இரத்தத்தில் ஊறியது. வித்தைக்கு வழி காட்டத் தமையனார் இருந்தார். அருள்மழை பொழிய முருகன் இருக்கின்றான்.

"நான் பிறந்தது பிலவங்க ஆண்டு தைத் திங்கள் (1908). நான் பிறந்தவுடனேயே என்னை வித்துவானாக்க வேண்டும் என்று தாயார் கனவு கண்டார். தமையனாரும் அப்படியே நினைத்தார். எமது தொழிலுக்கு ஏட்டுக் கல்வி மிகவும் முக்கியம். எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது ஏடு தொடக்கப்பட்டது. எமது ஊரில் வாழ்ந்த வேலுப்பிள்ளைச் சட்டம்பியார்தான் எனது குரு. இவர், மாவிட்டபுரம் கோயில் மேற்குவீதியில் உள்ள கதிரேசர் மடத்திலிருந்து இந்த ஊர்ப் பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்தார். விசயதசமி நாளன்று இவர் எனக்குத் தனது வீட்டிலே ஏடு தொடக்கினர். இதனை எனது தமையனாரும் உறவினர்களும் நின்று நடாத்தினர். வேலுப்பிள்ளைச் சட்டம்பியாரிடம் சுமார் ஆறு ஆண்டுகள் தமிழ் படித்தேன். கணக்கு, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நீதிவெண்பா போன்றவைகளுடன் வசனபாடப் புத்தகங்களையும் இந்தச் சட்டம்பியார் எனக்குப் படிப்பித்தார். பொதுவாக எல்லாக் குழந்தைகளுக்கும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், சைவவினாவிடை போன்றவை சமயக் கல்வியாக அமையும். இசையாளர் குடும்பத்தைச்

சேர்ந்தவன் நான். எனது தமையனாரின் வேண்டுகோளின்படி எனக்குச் சமயபாடம் சற்றுக் கூடுதலாகவே நடந்தது. என்னுடன் சுமார் இருபது பிள்ளைகள் படித்தார்கள். சட்டம்பியாருடைய வீடும் அந்த மடந்தான். எமது பள்ளியும் அந்த மடந்தான். இப்பொழுதுபோல நேரசூசி, பாடத்திட்டம், வாங்கு, மேசை எல்லாம் அப்போது கிடையா. சட்டம்பியார் மான்தோலில் இருப்பார். நாங்கள் திண்ணையிலிருப்போம். சட்டம்பியார் தான் விரும்புகின்ற பாடத்தைப் படிப்பிப்பார். அவரின் விருப்பப்படி நாமும் படித்தோம். படித்ததை மற்றநாள் திரும்பச் சொல்லா விட்டால் தண்டனை கிடைக்கும். தண்டனை என்றால் சற்றுக் கூடுதல்தான். நாம் எதையும் பொருட்படுத்துவதில்லை. சட்டம்பியாரின் அன்பு பெரிது. சம்பளக்காசு, வேதனம் எல்லாம் கேட்கமாட்டார். ஊர்மக்களின் மதிப்பு அவருக்கு இருந்தது. வேலுப்பிள்ளைச் சட்டம்பியாரை எனது முதற்குருவாக இன்றும் போற்றுகின்றேன். இவர் சுமார் எண்பது வயதுவரை உயிர் வாழ்ந்தவர். நான் புகழ்பெற்ற வித்துவானாக மாறும்போது என்னைக் கண்டு பூரிப்படைவார். எனது கச்சேரிக்கு வந்து கேட்டு மகிழ்ந்து என்னை வாழ்த்துவார். இவரின் முன்பாக நான் என்றுமே சால்வை போட்டது கிடையாது. என் தமையனார் முன்பும் அப்படித்தான். அந்தநாள் குருபத்தி அப்படி.

"எனது ஏட்டுப்படிப்பு நடந்துகொண்டிருக்கும்போது என்னைப் பிடித்து நாதசுர வித்துவானுக்குவதே என் தாயாரின் விருப்பம். தமையனாரின் விருப்பமும் அதுவே. இதன்படி எனது இசைக்கல்வித் தொடக்கம் ஒன்பது வயதில் நடந்தது. அந்தக் காலத்து நாதசுர வித்துவான்களுக்குரிய ஆரம்பக் கல்வி, வாய்ப் பாட்டு. இப்படிச் சொன்னால் இந்தக்காலத்தவருக்கு வியப்பாக இருக்கும். நாதசுர வித்துவான் ஒருவர் பாட்டின் பொருளையும் உணர்ச்சியையும் நன்கு விளங்கிக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு சொல்லையும் எழுத்தையும் சுத்தமாக, விழுங்காமல், சிதைக்காமல் உச்சரிக்கப் பழகவேண்டும். வாய்ப்பாட்டுமூலம் சிறந்த ஞானத் தைப் பெறுவது முக்கியம். இதற்காகச் சுமார் நான்கு ஆண்டுகள் வரை வாய்ப்பாட்டைப் படித்தேன். எனக்கு வாய்ப்பாட்டுக் குருவாக அமைந்தவர்கள், எனது இளைய தமையனார் துரைச் சாமியும் நாதசுரவித்துவான் அமிர்தலிங்கமும். சரளிவரிசை, ஜெண்ட வரிசை, அலங்காரம், கீதம், வர்ணம் போன்றவைகளைக் கற்றுத் தேறினேன். மேடையில் வாய்ப்பாட்டுக் கச்சேரி செய்யக் கூடிய ஞானம் பெற்றேன்.

"எனக்குப் பன்னிரண்டு வயதாக இருக்கும்போது நாதசுர நாட்பாடம் தொடங்கியது. எமது பரப்பரை வீடு கீரிமலை வீதியில் அமைந்துள்ளது. பொதுவாக இசையாளர் வீடுகளில் சரசுவதி பூசை சிறப்பாக நடைபெறும். எனக்கு நாதசுர நாட் பாடம் தொடங்குகின்றபடியால் மிகச் சிறப்பாக அன்று ஒழுங்கு கள் நடந்தன. எமது உறவினர் எல்லோரும் அழைப்பின்பேரில் வந்திருந்தனர். எனக்குத் தரவேண்டிய வாத்தியம் சிங்காரிக்கப் பட்டுப் பூசையில் இருந்தது. பூசை முடிந்ததும் எனது தமையனார் குழந்தைவேல் ஆசிர்வாதம்பண்ணி நாயினத்தை எடுத்துத் தந்தார். நானும் நிலத்தில் விழுந்து வணங்கியபின்னர் வாத்தி யத்தை வாங்கி ஒழுங்கின்படி வாசித்தேன். அன்று தொடக்கம் இந்தத் தெய்வக் கருவி என் மூச்சிலிருந்து ஒலித்துக்கொண்டு இருக்கின்றது. இந்தக் கட்டையை நான் விடும்வரையும் அப்படியே ஒலிக்கவேண்டும். முருகா! வள்ளிமணவாளா!" என்றார்.

"என் சிறுவயதிலிருந்தே நான் தாளக்காரனாகப் போயிருக் கின்றேன். இதுவும் முக்கியமான படிப்பு. பெரியவர்கள் கையாளு கின்ற நுணுக்கங்களை அவதானித்துக் கேள்விஞானத்தை வளர்க்க இந்தத் தாளக்கார இசைப்பயிற்சி வாழ்வு மிகவும் அத்தியாவசி யம். எனது நாட்பாடத்திற்குப் பின்னர் எனது தமையனாரின் கண்டிப்பான மேற்பார்வையில் ஒழுங்காகச் சாதகஞ்செய்து வந்தேன். கேள்விஞானம் மேலும் வளருவதற்காகத் தமையனார் என்னைத் தனது கச்சேரிகளுக்கு ஒழுங்காக அழைத்துச்செல்வார். அவருக்குப் பின்னால் இருந்து இராகம், ஆலாபரணம், பல்லவி, சுரம் என்பவைகளைக் கேட்டுக் கேள்விஞானத்தைப் பெருக்கி னேன். அவருடைய காலத்தில் அவருடன் சேர்ந்து வாசித்தவர்கள் பலர். பழம்பெரும் வித்துவான்கள் வரிசையில் 'தர்பார்' கந்தையா, சோ. சோமாஸ்கந்தர், அ.ரா. அண்ணாச்சாமி, மூளாய் சுப்பிரமணியம், நா. சோ. பக்கிரிசாமி, வல்வெட்டித்துறை வைத்திலிங்கம் போன்றவர்கள் இருந்தனர். இளம் வித்துவான் களாக நா. சோ. உருத்திராபதி, சு. வைரவநாதர், பா. இராசப்பா போன்றவர்கள் இருந்தனர். இவர்கள் வாசிக்கக் கேட்டுக் கொண்டிருந்ததால் கேள்விஞானம் தானாக வளருந்தானே! இப்பொழுதுபோல மோட்டார்வண்டிகள் அப்போது இல்லை. மாட்டு வண்டிகளில்தான் கச்சேரிக்குப் போவோம். வண்டியிற் சிரமமான பிரயாணம். போகும்போது எனது தமையனார் இசைபற்றியே பேசிக்கொண்டிருப்பார். கேள்வியுங் கேட்பார். விளங்கப்படுத்துவார். கச்சேரி முடிந்ததும் வீடு திரும்பும்போதும் இதே கதைதான். "இன்று இன்னார் வாசித்த தர்பாரைக் கேட்டாயோ? ஆனந்தபைரவியைக் கேட்டாயோ? அதுபோலப்

போனதும் சாதகஞ்செய்'', என்பார். தமையனார் படுத்திருப்பார் வீட்டுத் திண்ணையில். நான் பிழைவிட்டால் அப்படியே இருந்து திருத்துவார். வண்டி முழுவதும் போதனை வகுப்பு. இதனால் எமது வண்டிக்காரர் தன் மாடுகளும் தாளம் பிசகாமல் நடக்கின்றன என்று சொல்லிச் சிரிப்பார். வீட்டில் சாதனை வகுப்பு.

''இடையிடையே எமது உறவினராகிய நாதசுரவித்துவான் சோமாஸ்கந்தரிடமும் போய் என் வித்தையை வளர்த்து வந்தேன். நான் சாதகஞ் செய்யும்போது அவர் கேட்டுக்கொண்டு இருப்பார். பிழை ஏற்பட்டால் உடனே வாயால் பாடிக் காட்டி என்னைத் திருத்துவார். குழந்தை உள்ளம் படைத்த பெரும் வித்துவான் இவர். இவரிடம் பாடம் கேட்டதுபற்றி நான் இன்றும் பெருமைப்படுகின்றேன். நாதசுரக்கலையின் சகல அம்சங்களும் ஒருங்கே அமைந்த வித்துவான் ஆவார் இவர். இவரின் மகன்தான் பின்னர் புகழுடன் திகழ்ந்த நாதசுர வித்துவான் அப்புலிங்கம். பின்னர் வண்ணார்பண்ணையில் இருந்த நாதசுர வித்துவான் அ. இரத்தினசபாபதியிடம் சென்று சிட்சை பெற்றேன். வித்தையை நன்கு வளர்க்காமல் அரங்கேறப்படாது என்பது என் தமையனாரின் கண்டிப்பான கருத்து. அந்தக் காலத்துக் கலை மரபும் அதுதான். தமையனாரின் அன்புக் கட்டளைப்படி தமிழ்நாட்டிலுள்ள சிதம்பரம் வை. கோவிந்தசாமி நாதசுரகாரரிடம் சென்று குருகுலவாசஞ்செய்து என் வித்தையை மேலும் வளர்த்தேன். இவரிடம் இசை நுணுக்கங்கள் பலவற்றையும் கற்றுத் தேறினேன். இந்தப் பெரும் வித்துவானின் மகளைத் திருமணஞ் செய்தவர்தான் புகழ்பெற்ற நாதசுர வித்துவான் வேதாரணியம் வேதமூர்த்தி என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இப்படியானவர்களை எனது குருவாகக் கொண்டமை நான் செய்த பூர்வ புண்ணியம். அரங்குக்கு வரக் கூடிய ஞானம் வந்ததும் எனது உறவினர் எல்லோரும் சேர்ந்து, ''நீ இனிப் பகிரங்கமாக அரங்கில் வாசிக்கலாம்'', என்று கட்டளையிட்டனர். எனது தமையனார் குழந்தைவேல் அரங்கேற்றத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் எல்லாவற்றையும் மிகவுஞ் சிறப்பாகச் செய்தார். அவரின் கட்டளைப்படி தமிழ்நாட்டிலுள்ள இராமேசுவரம் தவில்வித்துவான் ஆ. சேதுராசாவை என்னுடன் அழைத்துவந்தேன். உறவினர்கள், இரசிகர்கள் எல்லோரும் எனது அரங்கேற்றத்திற்குத் திரண்டு வந்தனர். அப்பொழுது மாவை ஆதீனகருத்தராக இருந்த சா. சுப்பிரமணியக்குருக்கள் — இரத்தினக்குருக்கள் — எல்லாவற்றையும் முன்னின்று நடத்தி என்னை ஆசிர்வாதம்பண்ணினார். தமையனார் என்னை வாழ்த்தி வாத்தியத்தை எடுத்துத் தந்தார். முருகனை வணங்கினேன்.

பின்னர் குருக்கள் ஐயாவை வணங்கினேன். அடுத்து எனது குருவாம் தமையனாரை வணங்கினேன். பின்னர் கச்சேரியை மாலை வசந்தமண்டபத்தில் நடாத்தினேன். நான் அரங்கேறிய பொழுது எனக்கு வயது இருபது இருக்கும். எனது இசைக் கல்வியை இங்கு பிரித்துக்காட்ட விரும்புகின்றேன். தாளக் காரனாக இருந்தது ஒருகட்டம். வாய்ப்பாட்டுப் பழகியது ஒரு கட்டம். யாழ்ப்பாணத்திற் பெற்ற சிட்சை ஒருகட்டம். தமிழ் நாட்டிற் பெற்ற சிட்சை இறுதிக்கட்டம். சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் நான் மாணவனாக இருந்தேன். இத்தக்காலத்தில் நாதசுர வித்துவானாக விரும்புகின்றவர்கள் இதனைக் கவனிக்க வேண்டும்.

" படிப்படியாக எனது புகழ் வளரத்தொடங்கியது. இலங்கை யின் பல பாகங்களிலும் இந்தியாவிலும் கச்சேரி செய்திருக்கின் றேன். பிரபல தவில் வித்துவான்களைத் தமிழ்நாட்டிலிருந்து அழைத்து இங்கு சேவிக்க வைத்துள்ளேன். திருமங்கலம் சுந்தரேசன், முத்துவீர், திருச்செங்காட்டங்குடி உருத்திராபதி, இணுவில் இராசகோபால் போன்றவர்கள் எனக்குத் தவில் வாசித் தவர்கள். எனக்கு எப்பொழுதுமே ஆதீனங்களுடைய ஆதரவும் இரசிகர்களுடைய அன்பும் இருந்துவந்தன. எனக்குக் கிடைத்த புகழையிட்டு நான் அதிகம் பெருமைப்படவில்லை. என்னிடம் சிட்சைபெற்றவர்கள் இன்று மிகவும் புகழுடன் விளங்குவதைக் கண்டு நான் பூரிப்படைகின்றேன். எனது புகழ் வளர, என்னிடம் குருகுலவாசஞ் செய்யப் பல இளைஞர்கள் முன்வந்தனர். இவர் களுக்கு நான் மனம் கோணாமல் வித்தையைச் சொல்லிவைத்தேன். எனது கலை வாழ்க்கைக்கும், பாடஞ் சொல்லும் பணிக்கும் உறுதுணையாக இருந்தவர் எனது மனைவியார் வர்லாம்பிகை. இவர் வல்வைத் தவில்வித்துவான் மாணிக்கத்தின் மகள். குருகுல வாசஞ் செய்கின்ற இளம் பிள்ளைகளின் உணவு, உடை போன்ற தேவைகளை இவர்தான் மிகவும் அன்புடன் கவனிப்பார். என் மனைவியின் மறைவுக்குப் பின்னர் எனது வீட்டிலேயே வைத்துப் பாடஞ் சொல்லுவதைச் சற்றுக் குறைத்துக்கொண்டேன். சீடப் பிள்ளைகளிடம் நான் ஒருபோதும் வேதனம் கேட்டது கிடையாது. முருகன் எனக்கு வித்தையைத் தந்தான். அந்த வித்தையைப் பரப்புவது குருகுலவாசம். இதற்குப்போய் வேதனம் கேட்பது முருகனையே மறப்பதுபோலாகும். என்னிடம் சிட்சை பெற்றவர் கள் பலர். அவர்களுடைய பெயர்கள் எல்லாவற்றையும் இங்கு சொல்வது இயலாது. முன்னர் குறிப்பிட்ட அப்புலிங்கம் என்னுடன் இருந்து கற்றவர். சிறந்த வித்துவான். மற்றவர்கள் ஆறு ஆண்டிலே பெறுகின்ற வித்துவத்தை இவர் ஆறு மாதத்திலே

பெறக்கூடியவர். எனது உறவினராகிய நாதசுரவித்துவான் நா. சோ. உருத்திராபதியிடமும் இவர் சிட்சைபெற்றுத் தன் வித்தையை வளர்த்தவர். உருத்திராபதியின் வாத்தியத்தில் தனி மகிமை உண்டு. இவர் இப்பொழுதும் எம் மத்தியில் உடல் நலத்துடன் வாத்தியத்தைக் கைவிடாது வாழ்கின்றார் என்பது மகிழ்ச்சிக்குரிய அலுவல். அப்புலிங்கத்தின் பின்னர் கோண்டாவில் இராசப்பா நாகராசா, காரைநகர் க. கணேசன், அளவெட்டி த. இரத்தினவேல், கண்டி உருத்திராபதி, தாவடி கந்தசாமி போன்றவர்கள் என்னிடம் சிட்சை பெற்றவர்கள். அதன்பின்னர் எனது மருமகன் ச. சண்முகநாதன், இணுவில் இ. சுந்தரமூர்த்தி, இணுவில் கோ. கானமூர்த்தி, கோ. பஞ்சமூர்த்தி ஆகியோர் சிட்சை பெற்றனர். அண்மைக்காலத்தில் அளவெட்டி செ. சிதம்பரநாதன், இ. கேதீஸ்வரன் போன்றவர்கள் சிட்சை பெற்றனர். இப்பொழுதுகூட எனது பேரன் முறையான நா. கபிதாசன், நா. குகநாதன் போன்றவர்களுக்குப் பாடஞ் சொல்லுகின்றேன்.

''உங்களுடைய இலட்சியம் எது?'', என்று வினவினேன். இராசாவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. ''தம்பி என்னுடைய இலட்சியம் இன்னும் நிறைவேறாமலே இருக்கின்றது. நாதசுரப் பாடசாலை ஒன்றை அமைக்கவேண்டும். இதுதான் என் கனவு. இந்தப் பாடசாலையில் தவிலுக்கும் ஒரு பிரிவு கண்டிப்பாக இருக்கவேண்டும். சிறந்த ஞானம் உள்ள வித்துவான்களை இக் கல்லூரி உருவாக்கவேண்டும். இன்னும் இதை விரித்துக் கூற விரும்புகின்றேன். எமது மாவை ஆதீனத்தில் இசையாளர்களுக்குரிய மடம் ஒன்று இருக்கின்றது. அந்தக்காலத்தில் மாவை ஆதீனத்துக்குரிய பிறவூர் வித்துவான்கள் எல்லோரும் இங்கு தங்கித் திருவிழா இருபத்தைந்துநாளும் முருகனைச் சேவித்து வந்தனர். திருவிழாக் காலங்களில் இந்த மடம் கலைக்கூடமாகவே காட்சி தரும். இந்த மடத்திலேகூட ஒரு பாடசாலையை அமைக்கலாம். இதற்கு இசையாளர் ஆதரவு வேண்டும். இரசிகர்களுடைய நிதியுதவி தேவை. எல்லாவற்றிற்கும் மேலாக அரசாங்கத்தின் மானிய உதவி கிட்டவேண்டும். இப்படியான பூரணமான பாடசாலை, குருகுலவாசம் அற்றுக்கொண்டு வருகின்ற இந்த நாளிலே மிகமிக அத்தியாவசியம்.

''வித்தையைப்பற்றிப் பேசும்போது எல்லாம் எதிர்காலத்தையும்பற்றிப் பேசத்தான்வேண்டும். சிறந்த வித்துவானாக வேண்டுமானால் முறையான சிட்சை வேண்டும். முறையான சிட்சை இல்லாமல் அரைகுறையாகப் படித்துவிட்டு அரங்கேறுவது சங்கீதப்

பெருங்கடலைத் துரும்பு கொண்டு கடப்பதுபோலாகும். ஒருசில திரைப்படப் பாட்டுக்களையும் இந்தி மெட்டுக்களையும் வாசித்தால் வித்துவானாக முடியாது. வித்தை இருந்தால்தான் இரசிகர்கள் எம்மைப் போற்றுவார்கள்; மதிப்பார்கள். ஈழத்தைப் பொறுத்த வரையில் இரசிகப் பெருமக்களுடைய ஆதரவிற்கு எப்போதுமே குறைவில்லை. பார்க்கப்போனால் இப்போது இன்னும் கூடிக் கொண்டே வருகின்றது. காலத்திற்கேற்ப ஒலிபெருக்கி வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் சௌகரியமாக இருந்து எமது கச்சேரிகளைக் கேட்டு அனுபவிக்கின்றார்கள். எமது இளம் வித்துவான்களுக்கு வானொலிச் சாதனம் சந்தர்ப்பம் கொடுக்கின்றது. இதனால் அவர்களுக்குப் போதிய விளம்பரமும் கிடைக்கின்றது. காலத்தை ஒட்டி இதனை நாம் வரவேற்கவேண்டும்.

"எமது வித்துவான்களுக்கு ஒரு வேண்டுகோள். சன்மானத்தில் மிகவும் கண்டிப்பாக இருக்கக்கூடாது. கலைஞன் வாழ வேண்டும்; மறுக்கவில்லை. ஆனால் இடமறிந்து வாங்கவேண்டும் சன்மானத்தை. அந்தக்காலத்தில் நிறுத்திப் பேசிச் சன்மானம் வாங்குவது கிடையாது. செல்வந்தர்களின் வீடுகளில் நிறைய வாங்குவோம். கலையை விலைகூறி விற்பது நல்லதல்ல என்பது என் கண்டிப்பான கருத்து. கடும் நோயிலிருந்து ஒருவர் தப்பி நேர்த்திக்கடனைச் செய்வதற்காகக் காவடி எடுக்கின்றார். அவரிடம் நான் சன்மானம் கேட்கமாட்டேன். அப்படியான காவடியுடன் சேவிப்பதே புண்ணியம்.

"அந்தக்காலத்தில் தியாகராசசுவாமி, முத்துத்தாண்டவர், கோபாலகிருஷ்ணபாரதி, அருணாசலக்கவிராயர் போன்றவர்களின் கீர்த்தனங்களை நாம் நிறையப் பயன்படுத்தினோம். இந்தக்காலத்தில் தமிழ்க் கீர்த்தனங்கள் நிறைய வருகின்றன. பாபநாசம்சிவன் என் உள்ளத்தைக் கவர்ந்தவர். இவர்களுடைய கீர்த்தனங்களையும் நாம் கச்சேரிகளிற் சேர்த்துக்கொள்ள வேண்டும். மரபைக் கைவிடக்கூடாது. காலத்தையொட்டி மாறவேண்டும். ஒரு நாதசுரம் ஒரு தவில் என்பது அந்தக் காலம். இரண்டு நாதசுரம் ஒரு தவில் என்பது இடைக்காலம். இப்பொழுது இரண்டு நாதசுரம் இரண்டு தவில் என்பது நியதியாகிவிட்டது. நல்ல மாற்றங்களை வரவேற்பது கலைஞனின் கடமை.

"இன்று நாதசுர இசைக்கலையில் ஈழத்தில் முன்னிற்பது எமது பரம்பரை. இந்தப் பரம்பரையினர் எல்லோரும் முறையாகவே

சிட்சை பெற்றவர்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய அலுவல். இந்த மரபு ஒருபோதும் மாறக்கூடாது. நாதசுர இசையில் முன்னிற்கின்ற க. பத்மநாதன், ச. சண்முகநாதன், பாலகிருஷ்ணன், செ. சிதம்பரநாதன், இ. கேதீஸ்வரன், கோ. கானமூர்த்தி, சுந்தரமூர்த்தி, கோ. பஞ்சமூர்த்தி போன்றவர்கள் எல்லோரும் மரபுவழி மாறுமல் வித்தையைக் கற்றுத் தேறியவர்கள். தவிலில் தனக்கென்று தனியிடத்தைப் பெற்றுள்ள தெட்சணுமூர்த்தி, கணேசபிள்ளை, சின்னராசா, பழனிவேல் போன்றவர்களுடைய வித்தை கேட்டு நான் பூரிப்படைகின்றேன். இந்த வித்துவான்கள் எல்லோரும் பழைமையில் தோய்ந்த புதுப்பரம்பரையை உருவாக்க வேண்டும் என்பது எனது பிரார்த்தனை. இப் பிரார்த்தனை ஒருபோதும் பிழைபோகாது''.

''முடிவுரையாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?'', என்று கேட்டேன். இராசா சிரித்தார்; பின்னர் பேசினுர்: ''எமது இசை; தெய்வத்தன்மை படைத்தது. தெய்வ பத்தியும் மனத் தூய்மையும் இசையாளருக்கு வேண்டும். பழக்கவழக்கங்கள் எல்லாம் ஆசாரமாக அமைதல் முக்கியம். கடவுளோடு இசைய வைப்பதே இசை. இதில் எனக்குத் தளராத நம்பிக்கை உண்டு. இந்த நம்பிக்கையே என்னை வாழவைத்தது; என் குடும்பத்தை வாழவைக்கின்றது. எதிர்காலக் கலைஞர்களுக்கு ஒரு வார்த்தை. தெய்வபத்தியைக் கைவிடாதீர்கள்''.

இசைமூலம் பொலிவுபெற்ற இராசா ''முருகா! வள்ளி மணுளா!'' என்று தன் பேச்சை முடிக்கின்ருர்.

※ ※ ※

''எழுத்தறிவித்தவன் இறைவனுகும்'' என்பது ஆன்ருேர் வாக்கு. இசையை அறிவித்தவன் இறைவனுகும் எனவும் மாற்றிக் கொள்ளலாம். எனக்குக் கர்நாடக இசையை அறிவித்த கருவிகள் நாதசுரமும் தவிலும்தான். அறிவு என்ருல் பெரும் அறிவன்று. ''நாட்டைக்கும் நாட்டைக்குறிஞ்சிக்கும் என்ன வேற்றுமை?'', என்று கேட்கக்கூடிய அறிவு. இருந்தும் சீவாளிமூலம் இசையைப் பொழிகின்ருர் கலைவல்லார் ஒருவர். அவரின் இசையை விட்டு நான் நீங்கலாம்; ஆனுல் என் காதுகள் நீங்க மறுக்கின்றன. காரணம் என்ன? என்ருல் காரணம் கூறமுடியாது. காரணங்களை அலசி ஆராய்கின்ற அறிவிற்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்தி அந்த வாத்தியத்திற்கு இருக்கின்றது. நாதசுரம் அசுர வாத்தியம் என்கிருர் ஒருவர். வாசிப்பவரின் உடல் வலிமையைப்

பாதிக்கின்றபடியால் இப்படிக் கூறுகின்றார்போலும். இதற்கா அசுர வாத்தியம் என்ற பெயர்? நாதசுர ஓசையில் கடவுள் தன்மை கலந்து நிற்கின்றது. கலைஞனின் உயிரில், உடலில், மூச்சில், கனவில், கற்பனையில் இருந்து இந்த இன்னிசை பிறக்கின்றது. வாய்ப்பாட்டு விற்பன்னர் புன்னாகவராளியைப் பாடுகின்றார். மகிழ்ந்து கேட்கின்றேன். இடையில் தப்புத் தாளமும் போட்டுவிடுகின்றேன். அவரின் வித்தையைப் பாராட்டுகின்றேன். அதே இராகம் சீவாளியில் இருந்து பிறக்கின்றது. அந்த ஓசையை நான் கேட்கவில்லை. அது என்னையே ஆடவைக்கின்றது. ஆயிரத்தெட்டு வேல்களை உடலிற் பாய்ச்சிய காவடிக்காரனை ஆடவைக்கிறது அதுவென்றால் என்னை ஆடவைப்பதில் என்ன புதுமை? கோயிலுக்குப் போவோம். இல்லைப் போகாமல் வீதியில் நிற்கின்றோம். நாதசுர இசையைக்கொண்டே இப்போது யாக பூசை, இப்போது நடனம், இப்போது ஊஞ்சல், இப்போது சாமப்பூசை என்று எம்மைச் சொல்லவைக்கின்றார் நாதசுரக் கலைஞர். இந்த வாத்தியம் ஒன்றே போதும் மனிதனின் பண்பாட்டை அளவிட. வேறு கோள்களில் மக்கள் வாழ்கின்றார்கள் என்கின்றனர் விஞ்ஞானிகள். உண்மை பொய் தெரியவில்லை. அப்படி அவர்கள் இருந்தால், எமது பூமிக்கும் ஒருநாள் வரலாம்; வந்தால் எமது நாதசுரக் கலைஞர்குழாம் ஒன்றைச் சிறைப் பிடித்துத் தமது கோளுக்குக் கொண்டுசென்றாலும் வியப்படைவதற்கில்லை. மாவீரன் அலெக்சாண்டர் இந்தியாவிலிருந்து மெய்ப்பொருள் ஞானி ஒருவரைத் தமது நாட்டிற்கு அழைத்துச் செல்லவில்லையோ?"

❋

EVELYN R... INSTITUTE
108
REFERENCE LIBRARY
JAF...



பண்ணிசைப் பேராசான்
கீரிமலை த. செல்லையா



# " பண்ணும், கூத்தும் இந்த மண் இருக்கும்வரை நிலைக்கும்"

> தமிழ்ப் பண்ணிசைக்கும் கொட்டகைக் கூத்துக் கலைக்கும் தன் வாழ்நாள் முழுவதையும் பயன்தருமுறையில் செலவுசெய்த கீரிமலையைச் சேர்ந்த வீரசைவர் தமிழ்க்கலைச்சுடர் த. செல்லையா அளித்த நேர்முக உரையின் தொகுப்பு.

கீரிமலைத் தீர்த்தக்கரைக்கு அருகாமையில் வாழ்கின்றார் தம்பையா செல்லையா என்னும் வீரசைவர். இவருக்கு இப்பொழுது வயது எண்பத்தைந்தாகின்றது. வயோதிபத்தினால் ஏற்பட்டுள்ள தளர்ச்சி இவரில் தெரிகின்றது. கண்பார்வை சற்றுக் குறைவு. காது கேட்பதும் குறைவுதான். தமிழ்ப் பண்ணிசைக்கும், கொட்டகைக் கூத்துக் கலைக்கும் தன் வாழ்நாள் முழுவதையும் மிகப் பயன்தருமுறையில் இவர் செலவுசெய்தவர். தன் இளமைக் காலத்தில் இலங்கை அரசினர் புகைவண்டித் திணைக்களத்திற் சிலகாலம் கடமை புரிந்தவர். கலைவாழ்விற்கும் கட்டுப்பாடு நிரம்பிய அரசினர் பணிக்கும் ஒத்துவராது எனக் கருதித் தன் சிறு உத்தியோகத்தையும் உதறி எறிந்தார். கலை வாழ்க்கையில் மிகவும் ஈடுபட்டார். "கலைக்கும் வறுமைக்கும் நிறையத் தொடர்புண்டு", என்று சிரித்துக்கொண்டு கூறினார்.

நான் இவரைப் பார்க்கப் போனபோது சற்று உறக்கமாக இருந்தார். நான் வந்த அலுவலை எடுத்துக் கூறினர், இவரின் பேரக்குழந்தைகள். உடனே எழுந்தார்; கண்ணாடியைச் சரி செய்து மாட்டிக்கொண்டார்.

"நீங்கள் ஏன் தேவாரப்பண், கொட்டகைக் கூத்துக் கலையில் ஈடுபட்டீர்கள்?", எனக் கேட்டேன்.

"அதைப்பற்றிச் சொல்வதாக இருந்தால் என் வாழ்க்கை வரலாற்றையே சொல்லவேண்டி வரும். பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருப்பீர்களோ தம்பி?" என்றார்.

"தாராளமாகக் கேட்டுக்கொண்டிருப்பேன்", என்றேன்.

"இப்படிப் பொறுமையாகப் பேசிக் கலைஞர்களிடம் இருந்து பழைய விபரங்களைச் சேகரிப்பது இவரின் தொழில்", என்றார் என்னுடன் வந்திருந்த நண்பன் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை. முதியவரான செல்லையா பேசத் தொடங்கினார்.

"தம்பி, என் கலைவாழ்விலே எத்தனையோ எழுச்சியும் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளன. வாழ்விலே எத்தனையோ இன்பங்களும் துன்பங்களும் நிகழ்ந்துள்ளன. ஆனால் ஒன்றுமட்டும் நான் சொல்வேன். தமிழ்ப் பண்ணிசை தெய்வத்தன்மை வாய்ந்தது. அது என்றும் நிலைத்திருக்கும். மண் இருக்கும் வரை அதுவும் நிலைக்கும்; அழியாது. அதே போன்றதுதான் தமிழரின் கூத்தும் கூத்துக்கலை ஆர்வமும். என்னுடைய இளமைக் காலத்திலே நாட்டுக்கூத்து முறை நிலவியது. பின்னர்க் கொட்டகைக் கூத்துமுறை வந்தது. இப்போது வசன நாடகங்கள்தான் வளருகின்றன. இசை நாடகங்களும் தோன்றுகின்றன. எப்படி நடந்தாலும் கூத்துக்கலை தமிழனின் இரத்தத்திலே செறிந்துபோய்விட்டது. கூத்துக்கலை அழியாது; ஆனால் கூத்தாடுகின்ற கலைஞர்களின் வாழ்க்கை வறுமையின்றி நடக்க ஏதாவது இந்தச் சந்ததியினர் செய்ய வேண்டும்", எனப் பேசிக்கொண்டே போனார்.

"நல்லது உங்களுடைய பிறப்பு, வளர்ப்பு, ஆரம்பக் கல்வி, கலைக்கல்வி, கலை அனுபவம் என்பவைகளைப்பற்றி விபரமாகச் சொல்லுங்கள்", என்றேன்.

முதியவர் இளைஞரானார்; வாங்கின்மேல் சப்பாணிகொட்டிக் கொண்டு இருந்தார்; பின்னர்ப் பேசத் தொடங்கினார்:

"நாங்கள் வீரசைவர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். எங்களுக்குத் தொழில் பூசையும் கலையுந்தான். கோயில்களில் பூசை செய்வோம். தமிழ்ப் பண்ணிசை, கூத்து, காவடி, கரகம், சோடனை எல்லாம் வீரசைவர் வளர்த்த கலைகள். அந்தக் கலைச் சூழலிலேதான் நான் பிறந்து வளர்ந்தேன். பிறந்த ஆண்டு சரியாக நினைவில்லை. எனக்கு வயது 85 இருக்கலாம். என் தந்தையாரின் பெயர் தம்பையா. என் தாயாரின் பெயர் வள்ளியம்மை. எனது தகப்பனார் கவுணவத்தை வைரவர்கோயில் பூசாரியார். பண்ணிசையில் வல்லுனர். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் என்பவைகளை மிகவும் உருக்கமாகப் பாடுவார். அவருக்குச் சாரீரசுகம் நிறைய இருந்தது. பிற்காலத்தில் எழுந்த

கீர்த்தனங்களையும் மிகவும் அழகாகப் பாடுவார். காவடிச்சிந்தை அவர் பாடினுற் கேட்போரை நெகிழவைக்கும். எனது தாயாரின் தகப்பனுர் நாகமணிச் சட்டம்பியார். சிறந்த தமிழ்ப் புலவர். ஊர்ப் பிள்ளைகளுக்குத் தன் வீட்டில் வைத்துப் பாடஞ் சொல்லிக் கொடுப்பார். பின்னர்க் கருகம்பனையில் பள்ளி ஒன்றை அமைத்துப் பாடம் கற்பித்து வந்தார். என்னுடைய தகப்பனுரின் இசை ஆர்வமும், தமிழ் ஆர்வமுந்தான் என்னை இந்த நிலைக்கு உயர்த்தின. தமிழை முறையாக நான் கற்கவேண்டும் என்பது என் தகப்பனுரின் பேரவா. எனக்கு ஐந்து வயதளவில் ஏடு தொடக்கப்பட்டது. கருகம்பனையில் உள்ள பள்ளியில் விசயதசமித் தினத்தன்று சிதம்பரப்பிள்ளை வாத்தியார் எனக்கு ஏடு தொடக்கினுர். நல்லாக எனக்குத் தமிழ் கற்பிப்பதே என் தகப்பனுரின் நோக்கம். அதன்படி தமிழ் எட்டாம் வகுப்பு வரையும் படித்தேன். அந்தக்காலத்து எட்டாம் வகுப்பு என்றுல் மிகவும் உயர்ந்த படிப்பு. நான்காம் வகுப்பிலே நன்னூல், நிகண்டு என்பவைகளைப் படித்தோம். பின்னர் நளவெண்பா, மகாபாரதம் என்பவைகளைப் படித்தோம். காலத்தையொட்டி ஆங்கிலம் கற்கவேண்டும் என்பது எமது உறவினர் சிலரின் விருப்பம்.

"தமிழ்ப் பள்ளியில் படிக்கும்போதே கோயில் ஏவல்மேவல் எல்லாவற்றையுஞ் செய்துவந்தேன். எமது குலத்திற்கு ஏற்ற சமயப் பயிற்சியினையும், கிரியை முறையையும் நான் பெறவேண்டும் என்பது என் தகப்பனுரின் கண்டிப்பான கருத்து. இதில் எனக்குப் போதிய தேர்ச்சி வந்ததுந்தான் என்னை ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்ப இணங்கினுர் என் தகப்பனுர். காங்கேசன்துறையிலுள்ள அமெரிக்க மிசன் பாடசாலைக்கு நான் அனுப்பப்பட்டேன். வீரசைவர் குலத்தைச் சேர்ந்த நான், மிசன் பாடசாலையில் கற்பதை என் தந்தையார் பூரணமாக விரும்பவில்லை. ஆறும் வகுப்புடன் எனது ஆங்கிலக் கல்வியை நிறுத்தும்படி தகப்பனுர் கட்டளை பிறப்பித்தார். மனவருத்தத்துடன் படிப்பை முடித்தேன். இன்றும் ஆங்கிலம் பேச வாசிக்க எனக்கு நன்கு தெரியும்.

"ஆங்கிலம் கற்றுலும் என் ஆர்வம் எல்லாம் பண்ணிசை மேலேதான் இருந்தது. எனக்கு ஒன்பது வயதாக இருக்கும்போது பண்ணிசை வகுப்பு விசயதசமித் தினத்தன்று எமது வீட்டில் தொடங்கியது. இதற்கு எனக்குக் குருவாக அமைந்தவர் எனது மைத்துனர் — அதாவது சகோதரியின் கணவன் — சின்னையா. இவர் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர். பண்

வகுப்புத் தொடங்கமுன்னரே என் கேள்விஞானம் வளர்ந்து விட்டது. என் தகப்பனுர் போன்றவர்கள் தேவாரம், திருவாசகம் முதலியவற்றை ஓத நானும் பின்னுல் இருந்து சேர்ந்து பாடி வந்துள்ளேன். எனது அத்தான் காலையிலும் மாலையிலும் நேரம் வாய்க்கும்பொழுது எனக்குப் பண்ணைச் சொல்லித்தருவார். கோயில்களுக்குத் திருநாமஞ் சொல்லத் தானும் போவார். என்னையும் அழைத்துச் செல்வார். காவடி கரகப் பாட்டுக்கள் என்பவைகளையும் எனக்குச் சொல்லிக்கொடுப்பார். இப்படியாகச் சுமார் எட்டாண்டுகள் சென்றன.

"எனக்கு ஆங்கில அறிவும் தமிழ் அறிவும் இருந்தது. "இரங்கோனூர்", என அழைக்கப்படுகின்றவர் சி. நாகலிங்கம். எமது உறவினர். என் தந்தையாரின் அனுமதியுடன் நான் இரங்கூனுக்கு வேலை தேடிப் போனேன். கப்பற் போக்கு வரத்து வேலையிற் சிலகாலம் இலிகிதராகக் கடமை புரிந்தேன். அதனுல் சென்னைக்கும் அடிக்கடி வருவது வழக்கம். பர்மியச் சுவாத்தியமும் கப்பலிற் போகின்ற வேலையும் எனக்குப் பிடிக்க வில்லை. 'இரங்கூனுரின்' அனுமதியுடன் சென்னை வந்தேன். எனது வாழ்க்கையில் புதிய திருப்பம் ஏற்பட்டது", என்று கூறிவிட்டுச் செல்லையா தன் மூக்குக் கண்ணுடியைக் கழற்றினுர்.

"ஏது", என்று வினவினேன்.

"நான் மீண்டும் இசைக் கல்வியில் ஈடுபட்டேன். சென்னை இராகவமுதலியாரை எனது பண்ணிசைக் குருவாகக்கொண்டேன். யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது சைவக்குருக்கள் சுப்பையா என்பவரிடமும் இரண்டாண்டுகாலம் பண்ணிசையைப் படித் தேன். 'இரங்கூனுர்" எனக்குப் பொருளுதவி செய்தார். சென்னையில் தங்கியிருந்து எனது குருவாம் இராகவமுதலியாரிடம் பண்ணைக் கற்றேன். சொந்தமாகக் கீர்த்தனங்களைப் பாடும் ஆற்றலையும் பெற்றேன். முருகன் பேரிலே பல பாடல்களைப் பாடியுள்ளேன். அவைகளிற் பலவற்றை நான் பேணி வைக்க வில்லை. சென்னையில் என் குருவின் ஆசியைப் பெற்றுக்கொண்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்தேன். தகப்பனுருக்கு எனது வருகை இன்பமாக இருந்தது. வீரசைவர் குல ஒழுக்கப்படி நான் வாழ்வதை அவர் விரும்பினுர். சிலகாலம் இலங்கை அரசினர் புகைவண்டிப் பகுதியிற் கடமை புரிந்தேன். கலைவாழ்க்கைக்கும் அரசாங்க சேவைக்கும் ஒத்துவராது. அதனை உதறிவிட்டு மீண்டும் இசையுலகிலே புகுந்தேன். மற்றும் ஒரு திருப்பம் ஏற்பட்டது என் வாழ்வில்".

"சொல்லுங்கள் பார்க்கலாம்", என்றேன்.

"எமது குலத்திலே பலர் அண்ணாவிமாராக இருந்தனர். எனது காலத்திலே புகழ்பெற்ற அண்ணாவியாராக இருந்தவர் எமது உறவினர் நன்னியர். இவருடைய விருப்பப்படி "பதிவிரதை" என்னும் நாடகத்திலே நடிக்க இணங்கினேன். தகப்பனாரும் என்னை ஆசீர்வதித்தார். எனக்குக் கொடுக்கப் பட்ட பாத்திரம் பதிவிரதை — பெண் பாத்திரம். புகழ்படைத்த அண்ணாவியார் இளையதம்பி முக்கிய பாத்திரமாகிய வித்தியா சம்பன்னன் பொறுப்பை ஏற்றார். இதில் சட்டம்பியார் தம்பையா போன்றவர்களும் நடித்தனர். நாங்கள் கூத்துப் பழகிய முறை யைக் கூற விரும்புகின்றேன். அப்பொழுது நாட்டுக்கூத்து முறையும் இருந்தது. கொட்டகை அமைத்து நாம் ஆடும் கூத்து, பாட்டும் நடிப்புமாகவே இருந்தது. இதனைக் கொட்டகைக் கூத்து என்பர். நாடகம் என்ற பெயர் வழக்கில் பின் வந்தது. நாட்டுக் கூத்தென்றாலும் சரி, கொட்டகைக் கூத்தென்றாலும் சரி புனிதமானது. நாங்கள் நாட்பார்த்துக் கூத்தும் பழகத் தொடங்கினோம். அந்தத் தொடக்கம் உண்மையில் புனிதமான விழாவாகவே அமைந்தது. பிள்ளையார்பூசை நடந்தது. பிரசாதம் கொடுத்தோம். நிறைகுடம், குத்துவிளக்குச் சகிதமாக எமது நாட்பாடம் நடந்தது. சுமார் ஆறுமாதம் வெள்ளுடுப்பாக ஆடினோம். இவை எல்லாம் அளவெட்டியில் நடந்தவை. இந்த முயற்சிக்கு எமக்கு உறுதுணையாக இருந்தவர் அப்போதைய மணியகாரன் பார் குமாரகுலசிங்கி. இவர் சிறந்த கலாரசிகர். பாவலர் துரையப்பாபிள்ளையின் நண்பன். பாவலரும் சிறந்த நாடகக்காரர். அவரின் 'சகலகுண சம்பன்னன்' நாடகத்தை நான் நேரிலே பார்த்திருக்கின்றேன். இவ்விருவரும் உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவிப்பவர்கள். இந்தியாவிலிருந்து வருகின்ற எம். ஆர். கோவிந்தசாமி, எஸ். ஜி. கிட்டப்பா, செல்லம்ஐயர் போன்றவர்களை இவர்கள் பாராட்டுவார்கள், ஆனால் பாவலர் துரையப்பாபிள்ளை, உள்ளூரிலே கலைஞர்களை உருவாக்கி வளர்க்க வேண்டும் என்பதில் பெரும் ஈடுபாடு உடையவர். எமது அண்ணாவியாருக்கு மத்தளம் வாசிக்கத் தெரியும்; கெஞ்சிரா வாசிக்கத் தெரியும்; தித்தி வாத்தியம் வாசிப்பதிற் கைதேர்ந்தவர். மிருதங்கம், ஆர்மோனியம் என்பவைகளை நாம் கையாளவில்லை அப்போது. மத்தளம் ஒன்றுமே போதும். இடிமுழக்கம் தொடக் கம் சிறு பிள்ளைகள் நடக்கும் ஓசைவரை மத்தளத்தில் எழுப்பலாம். பார் மணியகாரனின் வேண்டுகோட்படி அவரின் வீட்டுக்கு அருகாமையிற் கொட்டகை அமைத்து அரங்கேற்றி னோம் "பதிவிரதை" நாடகத்தை. இப்போதையைப்போல

நுழைவுச் சீட்டு எதுவும் கிடையாது. விடுவீடாகச் சென்று உற்றார், உறவினர், நண்பர் எல்லோருக்கும் அரங்கேற்றத்திற்குச் சொன்னோம். கூத்து இரவிரவாக நடந்தது. அது எனது முதல் முயற்சி. மாபெரும் வெற்றி. வேண்டியவர்கள் நாம் கேளாமலே அண்ணாவியாருக்கும் எமக்கும் வேட்டி, சால்வை, பணமுடிப்பு எல்லாம் தந்தனர். உறவினர்களும் அன்பர்களும் எம்மைப் பார்த்து, "அளவெட்டியிலும் இந்தக் கூத்தைப் போடுங்கள். செலவை நாம் தருவோம்", என எம்மை ஊக்கப்படுத்தினர். இப்படியாகத் தொடங்கியது எனது கூத்து வாழ்க்கை. சுமார் இருபத்தைந்து நாடகங்களில் நான் நடித்தேன். எல்லாம் புராண இதிகாசக் கதைகள். உயர்ந்த தத்துவம் உடையவை. பின்னர் அண்ணாவியூார் நன்னியரின் கட்டளைப்படி நானும் அண்ணாவியாராகினேன். எனது பேரும் புகழும் வளரத் தொடங்கின. சுமார் ஐம்பது நாடகங்களைப் பழக்கி அரங்கேற்றினேன். சன்மானம் கேட்டது கிடையாது. தருவதை வாங்கிக் கொள்வேன். எனது பிள்ளைகளையும் கலைவாழ்வில் ஈடுபடுத்த விரும்பினேன். 'சிறுத்தொண்டன்' நாடகத்தில் எனது மூத்த மகன் பஞ்சாட்சரத்தைச் சிறுத்தொண்டனாகவும் இளைய மகன் பொன்னுச்சாமியைச் சீராளனாகவும் வைத்து அரங்கேற்றினேன். இந்தப் பயல் பொன்னுச்சாமிதான் பின்னர் பொன்னுச்சாமி தேசிகர் என்ற பெயரில் புகழ்விட்டுப் பிரகாசித்த நடிகர். அதோ அங்கே இருக்கின்றான்", என்று தன் மகனைச் சுட்டிக்காட்டினார்.

"நான் நாடகத்திலே நன்கு ஈடுபட்டேன். ஆனால் தகப்பனாரின் அருள் ஆணை, "தேவாரம், திருவாசகம், திருப்புகழ் ஆகியவைகளை ஒருபோதும் மறவாதே!" என்பதாகும். திருவிழாப் பட்சங்களில் நான் கோயில்களில் பண்ணிசை நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளேன். மத்தளம், கெஞ்சிராவுடன் பிட்டிலையும் சேர்த்துக்கொண்டேன். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலைச் சிவன்கோயில், அளவெட்டி காத்தவராயர்கோயில், தொண்டைமானாறு சந்நிதி முருகன் கோயில்களில் சிவநாமம் சொல்லியிருக்கின்றேன். முருகன் புகழைப் பாடியுள்ளேன். காவடிப் பாட்டுக்களைப் பாடியுள்ளேன். பண் இசைத்துறையிலும் என் பெயர் வளரத் தொடங்கியது. அன்பர்கள் பலர் என்னிடம் வந்து பண்ணிசை நிகழ்ச்சிகளை நடாத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்வார்கள். சன்மானம் பேசி நான் வாங்கியது கிடையாது. தந்ததை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொள்வேன். பண்ணிசையில் முழுமூச்சாக ஈடுபட்டேன். யாழ்ப்பாணத்தில் கலைஎழுச்சிக் காலம் ஒன்று உருவாகியது. சங்கரசுப்பையர், மாணிக்கத் தியாகராசா போன்றவர்கள் மகாவித்துவான்கள். இவர்கள்

இசையுலகத்தில் எழுச்சியை உருவாக்கினர். அதேபோல நாதசுரத் துறையும் அமைந்தது. நாதசுர வித்துவான்களாக மாவிட்டபுரம் குழந்தைவேல், சோமாஸ்கந்தர், பக்கிரிசாமி, வண்ணார்பண்ணை அண்ணசாமி போன்றவர்கள் இருந்தனர். தவில் வித்துவான்களாக இணுவில் பெரியபழனி போன்றவர்கள் இருந்தனர். மாவிட்டபுரம் நாதசுர வித்துவான் குழந்தைவேல் எனது உற்ற நண்பர். என்னைப் பெரிதும் ஊக்கப்படுத்தியவர். என் மகன் பொன்னுச்சாமியை வாழ்த்தியவர். இந்த எழுச்சி காரணமாகப் பண்ணிசையைக் கற்கவேண்டும் என்ற ஆர்வம் பள்ளிக்கூடங்களில் வளர்ந்தது. ஏழு பாடசாலைகளில் பகுதிநேர ஆசிரியராக இருந்து பண்ணிசையைக் கற்பித்துள்ளேன். இப்படியாக நான் குப்பிளான், இளவாலை போன்ற இடங்களுக்குப் போயிருக்கிறேன். பரமேசுவராக் கல்லூரி அதிபர் சைவத்திரு மு. ஞானப்பிரகாசரின் அழைப்பை ஏற்றுப் பரமேசுவராவில் பண்ணிசையைப் போதித்தேன்''. இப்படி இவர் கூறிக்கொண்டு இருக்கையில் இவரால் எழுதி வெளியிடப்பட்ட பக்திக் கீர்த்தனைக்குத் திரு. மு. ஞானப்பிரகாசம் எழுதிய முன்னுரை என் நினைவில் வந்தது. அதை அப்படியே இங்கு தரலாம்:

''இந் நூல் ஆசிரியர் திரு. த. செல்லையாக்குருக்கள் அவர்களை யான் நன்கு அறிவேன். சிறந்த சமயத்தொண்டர் — தேவார ஆசிரியர். தம்முடைய அநுபவத்திலெழுந்த உண்மைகளை விநாயகப்பெருமான் பேரிலும் முருகப்பெருமான் பேரிலும் கீர்த்தனைகளாகப் பாடியுள்ளார். 'சூரசங்காரன்' எனத் தொடங்கும் கீர்த்தனைப் பகுதி மிகுந்த கருத்துவளம் செறிந்தது''.

எங்களுடன் பேசிக் களைத்த இந்த முதியவருக்குப் பேரன் ஒருவன் தேநீர் கொண்டுவந்து வைத்தான். எமக்கும் தேநீர் வழங்கும்படி முதியவர் செல்லையா கேட்டுக்கொண்டார். தேநீரை எடுத்துத் தமது கையால் எமக்கு வழங்கினர். எல்லோரும் தேநீர் அருந்தினேம். ''வேறு என்ன சமயத்தொண்டு செய்திருக்கிறீர்கள்?'' எனக் கேட்டேன்.

''ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். நான் புராணபடனஞ் செய்திருக்கின்றேன். என்னைக் கவர்ந்தது திருவாதவூரடிகள் புராணம். இதனை நான் தொடர்ச்சியாகப் பல்லாண்டுகள் சித்திரமேழி ஞானவைரவர் கோயிலில் படித்திருக்கின்றேன். என்னைப் பெரிதும் கவர்ந்தவர் உரையாசிரியர் மட்டுவில் ம. க. வேற்பிள்ளை. இவரை நான் ஒருபோதும் சந்திக்கவில்லை. அந்தப் புண்ணியம் எனக்குக் கிட்டவில்லை. அவரை, ஏகலைவன்போல்

எனது குருவாக மதித்துப் போற்றிவருகின்றேன். வேலும் மயிலும் துணை'', என்று தம் பேச்சை முடிக்கின்றார். பழைய பெட்டகம் ஒன்றைத் திறந்து பார்த்துக் கலைச்செல்வங்களைக் கண்ட பெருமையுடன் நான் திரும்புகின்றேன். அதற்குத் திறவு கோல் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை.

* * *

''பண்டைக்காலத் தமிழ் மக்கள் தமக்கென வீட்டைக் கட்டினர். இது ''இல்'' ஆயிற்று. அம்மக்கள் கடலை நோக்கினர்; மலையை நோக்கினர்; ஆற்றை நோக்கினர்; வயலை நோக்கினர்; காட்டை நோக்கினர். அந்த நோக்குக்கு அப்பால், காலத்தால் அழியாத பெரும்பொருள் உண்டு என்பதை உணர்ந்தனர். அதற்குக் ''கோ'' என்ற பெயரைக் கொடுத்தனர். அந்தப் பெரும்பொருளுக்கு ''இல்'' ஒன்றை அமைத்தனர். அது ''கோயில்'' ஆயிற்று. ''கோ'' என்னும் இடத்து முருகன் என்ற கடவுளைப்பற்றிக் குறிப்பிடல் வேண்டும். தமிழ் மக்களுக்குச் சிறப்பான கடவுள் முருகன்.

வயல் விளைய மழை வேண்டும்; வெய்யில் வேண்டும்; காற்று வேண்டும். இவற்றை இயக்குவிக்கவும் வருவிக்கவும் பெரும்பொருள் ஒன்று உண்டு என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்தனர். பகலவன் பெரியவன். அவனிலும் பார்க்கப் பெரியவன் கோயில்கொண்டருளும் முருகன். வயலிலே, தோட்டத்திலே விளைந்தவை யாவும் பெரும்பொருளின் அருளாலே நிகழ்ந்தவை. எனவே அப் பொருள்களைக் கோவிலுக்கு எடுத்துப் படையல் செய்தனர். ''உன் அருளாளே விளைந்தவற்றை உனக்குப் படையல் செய்கின்றேன்'', என்பதே இதன் நோக்கம். படையல்களைச் சுமந்துசெல்லக் காவுதடிகளைப் பயன்படுத்தினர். காவுதடிகளை எடுத்துச் செல்லும்போது பறை முதலாம் இசைக் கருவிகளும் இசைக்கப்பட்டன. ''காவுதடி'', என்ற உழவர் காணிக்கையே காவடி என்றாயிற்று. முருகனுக்குரிய சிறப்பான வழிபாடு ''காவடி எடுத்தல்.''



தமிழ்க்கலைப் பேராசான்
மூளாய் ஆ. வை. ஆறுமுகம்

# "அப்பனைச் சேவிக்கின்றேன் செப்பமாகத் தவில் வித்தையைப் போதிக்கின்றேன்"

> பிரபல தவில் வித்துவான் மூளாய் ஆ. வை. ஆறுமுகம் அளித்த நேர்முக உரையின் தொகுப்பு. இசை உலகிற்கு இவர் அளித்த இணையற்ற செல்வம், மகன் வலங்கைமான் சண்முக சுந்தரம். ஈழத்தில் தவில் வித்துவான்கள் பலரை இவர் உருவாக்கியுள்ளார்.

எண்பத்திரண்டு வயது நிரம்பிய தவில் வித்துவான் மூளாய் ஆ. வை. ஆறுமுகம் இப்பொழுது கோண்டாவிலில் மிகவும் சுறுசுறுப்பாக வாழ்க்கையை நடாத்திவருகின்றார். கண் பார்வை சற்றுக் குறைவு. அந்தக்காலத்தில் இவரின் வாத்தியத்தில் இருந்த துரிதம் இப்பொழுது பேச்சிலிருக்கின்றது. செயலிலும் இருக்கின்றது. இப்பொழுதும் தவிற் கலையைப் போதித்துக்கொண்டே இருக்கின்றார். இவரைக் காண்பதற்காக மாவிட்டபுரம் நாதசுர வித்துவான் இ. ஞானசுந்தரமும் நானும் போயிருந்தோம். எங்களை அன்புடன் உபசரித்தார். எமது நோக்கத்தை விளங்கப் படுத்தினோம். "இவ்வளவு தூரம் பிரயாணஞ்செய்து என்னைக் காண வந்திருக்கின்றீர்கள். நீங்கள் கேட்பதற்கெல்லாம் என் சிற்றறிவுக்கு எட்டியபடி மறுமொழி சொல்லுகின்றேன்", என்றார்.

"சிற்றறிவு இல்லை, பேரறிவு", என ஞானசுந்தரம் திருத்தினார். "என்னை நான் எப்பொழுதுமே புகழ்ந்ததில்லை. இசைக் கடலில் நான் சிறுதுளி", என்றார் தாத்தா ஆறுமுகம். "உங்கள் வாழ்க்கையைப்பற்றிக் கூறுங்கள்", என்றேன். எந்தவிதமான மறுப்பும் இல்லாமல் பேசத் தொடங்கினார்.

என் பாட்டனார் பெயர் ஆறுமுகம். அவர் தவில் வித்துவான். என் தகப்பனார் பெயர் வைத்திலிங்கம். அவரும் தவில் வித்துவான். நான் பிறந்து வளர்ந்த இடம் மூளாய். தாயாரின்

பெயர் வடிவழகி. வடிவழகியின் தகப்பஞரின் பெயர் சபாபதி. அவர் நாதசுர வித்துவான். எங்கள் குடும்பமே இசைக் கல்லூரி போன்றது. எங்கள் தகப்பஞருக்கு ஐந்து ஆண் பிள்ளைகள். சீதாராமன், இருளப்பபிள்ளை, நான், கோவிந்தசாமி, செல்லக் கண்ணுப்பிள்ளை, ஒரு பெண் சீதாலட்சுமி. இவர்களில் இருளப்ப பிள்ளை உத்தியோகம் பார்த்தவர். மற்றவர்கள் எல்லோரும் இசைக்காகவே வாழ்ந்தவர்கள். நாங்கள் எல்லோரும் நன்ருகக் கமஞ் செய்வோம். தகப்பஞரும் கமஞ் செய்வார். எனது பெரியப்பாக்கள் நால்வர் சிறந்த நாதசுர வித்துவான்கள். அவர் களின் பெயர்கள் இருளப்பபிள்ளை, வீராசாமி, சின்னையா, ஆறுமுகம். எனவே என் உறுப்பெல்லாம், நரம்பெல்லாம், இரத்தமெல்லாம் நாதஞ் செறிந்துபோய்விட்டது. எமது தொழி லுக்கு ஏட்டுப் படிப்பு முக்கியம். இரண்டு காரணங்களுக்காகக் குறிப்பிட விரும்புகின்றேன். ஒன்று இசையை நன்கு கற்று அறிய ஏட்டுப் படிப்பு முக்கியம். இரண்டு நல்ல தமிழ் அறிவு, நல்ல குணத்தை, பண்பை உருவாக்கும். எனது ஆரம்பக் கல்வி ஏட்டுப் படிப்புடன் தொடங்கியது. இப்பொழுதுள்ள பொன்ஞலை வரதராசப்பெருமாள் ஆலயத்திற்கு அருகாமையில் நாராயணச் சட்டம்பியார் என்று ஒருவர் இருந்தார். அவர் பிள்ளைகளுக்குத் திறம்படப் பாடஞ்சொல்லிக்கொடுத்துவந்தார். எனது தகப்பஞர் என்னையும் வித்துவாஞக்கவேண்டும் என்று எண்ணியிருந்தார். எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது ஏடு தொடக்கப்பட்டது விசயதசமித் தினத்தன்று. நாராயணச் சட்டம்பியார்தான் எனது முதற்குரு. மிகவும் கண்டிப்பானவர். அதோடு அன்பாக வும் நடாத்துவார் எம்மை. படித்த பாடத்தை ஒப்படைக்கா விட்டால் மறுநாள் சதையைப் பிடுங்கி எடுத்துப்போடுவார். மாணவரின் கல்வி முன்னேற்றத்திற்காகவே வாழ்ந்தவர். இவ ரிடம் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நிகண்டு, தேவாரம், திருவாசகம், திருப்புகழ், குமரேசர் சதகம் போன்றவைகளைச் சுமார் ஆறு ஆண்டுகள்வரை கற்றேன். இப்படி ஏட்டுக்கல்வி நடந்துகொண்டிருக்கும்போது எனக்கு இசைக் கல்வி நாட் பாடமும் பத்தாவது வயதில் ஆரம்பமாகியது. எனது பெரியப்பாக் களைப் பார்த்ததிஞலோ என்னவோ எனக்கு நாதசுரத்தின்மேல் தான் ஆசை பிறந்தது. தொடக்கத்தில் நாதசுரம்தான் படித் தேன். எனது முதற் குரு சபாபதி நாயினக்காரரின் மகன் முத்துச்சாமி நாயினக்காரர். இவர் எனது மாமஞர். சுமார் மூன்று ஆண்டுகள் நாதசுரத்தை இவரிடம் முறையாகப் பயின் றேன். இப்பொழுதும் கோயில்களில் நாதசுரம் வாசிப்பேன். எனது குலதெய்வம் சிவன். சிவனருளோ என்னவோ தெரியாது

எனக்குத் தவில்மேல் ஆசை பிறந்தது. எம்பெருமான் என்னைத் தவிலுக்குத் திருப்பிவிட்டார். எனது தமையனார் சீதாராமன் சிறந்த தவில் வித்துவான். இவர் சிலகாலம் தஞ்சை மாவட்டத்திலுள்ள தண்டலைச்சேரி ஆதீனத்தில் சேவித்துவந்தார். இவரைப்போல நானும் ஏன் வித்துவானாக முடியாது என நினைத்தேன். என் விருப்பத்திற்கு என் தகப்பனார் இணங்கினார். என்னை ஆசீர்வதித்தார். ''சிறந்த தவில் வித்துவானாக நீ மாறுவாய்'', என்று ஊக்கப்படுத்தினார். தவிலைப் பழகுதிவல் முழுமூச்சாக ஈடுபட்டேன். தாளக்காரனாகப் போய் எனது கேள்விஞானத்தை வளர்த்தேன். பெரிய பெரிய தவில் வித்துவான்களின் கச்சேரிகளுக்கெல்லாம் என் தமையனார் என்னை அழைத்துப் போவார். வாய்ப்பாட்டும் சொல்லிக்கொடுப்பார். ''உன் வித்தை தானாகவே வளருதடா!'', என்று தமையனார் என்னை முதுகில் தட்டிக் கொடுப்பார். எனக்கு அரங்கேற்றம் என்று எதுவும் நடக்கவில்லை. தமையனார் போகமுடியாத கச்சேரிகளுக்கு நான் போவேன். இப்படியாகப் படிப்படியாக உயர்ந்து சேகல் சோமு நாயினக்காரர், சாமிநாத நாயினக்காரர் போன்றவர்களுக்குத் தவில் வாசித்துள்ளேன். பொடியனாகிய என்னை அவர்கள் எல்லோரும் உற்சாகப்படுத்தினார்கள். ''பெரிய வித்துவான்கள் செய்கின்ற நுணுக்கங்களை இந்தச் சின்னப்பயல் செய்கின்றான்'', எனப் பெரியவர்கள் என்னைப் பாராட்டினர்.

''தமையனாரின் கட்டளைப்படி இலங்கைக்கு வந்தேன். மூளாய்ப் பிள்ளையார் அனுக்கிரகமும், சிவபெருமானின் அருளும் சேர்ந்து என்னை உயர்நிலைக்குக் கொண்டுவந்தன. எனது பெயர் நன்கு வளரத்தொடங்கியது. இப்பொழுதுபோல ஒலிபெருக்கி வசதிகள் கிடையா. கோயில் வடக்கு வீதிகளிலேதான் கச்சேரி நடைபெறும். எனது கச்சேரிகள் இரசிகர்களைக் கவரத்தொடங்கின. இசைபற்றி அந்தக்காலத்தில் மரபுகள் பல இருந்தன. பெரியவர்களின் சொல்லுக்கு நாம் கீழ்ப்படிந்து நடந்தோம். தந்தை, தாய், மூத்தோர் சொல்லைத் தட்டுவது கிடையாது. அந்தக்காலத்துக் குருபக்தி போற்றத்தக்கது. எனது பிற்கால இசை விளக்கத்திற்கும், ஆராய்ச்சிக்கும் பெரும் துணையாக அமைந்தது தமிழ் அறிவு. எனது தமிழ்க் குருவாம் நாராயணச் சட்டம்பியாரிடம் நிறைய அடிவாங்கியிருக்கிறேன்; ஆனால் அவர் ஊட்டிய தமிழ் அறிவின் பெருமையை இன்று நான் உணருகின்றேன். இந்தியாவிலே நான் தங்கியபோது மாபெரும் தவில் வித்துவான் திருமுல்லைவாசர் முத்துவீர் எனது தமிழ் அறிவைப் பாராட்டியிருக்கின்றார். பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு ஒழுங்காக நடப்பது கலை வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

இதனை இந்தக்காலத்து வித்துவான்களுக்குச் சொல்லிவைக்க விரும்புகிறேன். சுமார் இருபது வயதாக இருக்கும்போது நான் சிறந்த வித்துவானாக எல்லோராலும் கணிக்கப்பட்டேன். அறுபத்தைந்து வயதுவரையும் தவிலைத் திறம்பட வாசித்து வந்திருக்கிறேன். அந்தக்காலத்தில் மூத்தவர்களுக்குக் கட்டுப் பட்டுத்தான் சேவகஞ் செய்திருக்கின்றேன் என்பதைக் கூறுவதில் பெருமையடைகின்றேன். எனது காலத்தில் ஈழத்திலே தவிலில் பெரும் வித்துவான்களாகத் திகழ்ந்தவர்கள் பலர். அவர்கள் எல்லோருடைய பெயர்களையும் இங்கு குறிப்பிடுவது இயலாது. என் நினைவில் இன்றும் நிலைத்திருப்பவர்கள் இணுவில் பழனி, இணுவில் சிசுவலிங்கம், அளவெட்டி நாகலிங்கம், நா. காமாட்சி சுந்தரம், பெரியகணேசு, மல்லாகம் இரத்தினம் போன்றவர்கள். இவர்கள் எல்லோரும் என்னுடன் அன்பாகப் பழகுவார்கள். நானும் அவர்களுடன் அப்படியே நடந்துகொண்டேன்.''

''அந்தக்காலத்துக் கலை மரபைப்பற்றி விபரமாகக் கூறுங்கள்'', என்றேன். உடனே தாத்தா ஆறுமுகம் தன் துண்டை எடுத்து உதறிக்கொண்டு ஆவேசத்துடன் எழுந்துவிட்டார். ''தம்பி கோவிக்கப்படாது. இந்தக்காலத்துக் கலை மரபின் கொலைக்கு ஓர் உதாரணம். ஏதோ ஒரு கோயிலுக்குப் போயிருந் தேன். எந்தக் கோயிலென்று ஞாபகமில்லை. இளம் பையன் ஒருவன் நல்லாக வாசித்துக்கொண்டிருந்தான். நாதசுரத்தை சுவாமி வீதியுலா வருவதற்குரிய நேரத்தில், ''ஒரு பெண்ணின் மனதைத் தொட்டுவிட்டுப் போறவரே அந்த மர்மத்தைச் சொல்லி விட்டுப் போங்க'', என்ற இழவை வாசித்தான். அந்தக்காலத் தில் நாங்கள் இப்படிச் செய்தால் எமது காதைப் பெரியவர்கள் பிடுங்கி எடுத்துப்போடுவார்கள். கேட்டுக்கொண்டு நின்ற எனக்கு மனம் பொறுக்கவில்லை. வாசித்துக்கொண்டு நிற்கின்ற பைய னிடம் போய்ப் பேசுவது நாகரிகம் இல்லை. பின்னர் பையனிடம் போய்ப் பேசினேன். ''தம்பி! உன் வித்தையைப் பாராட்டு கின்றேன். அப்பனைச் சேவிப்பதற்கு மரபுகள் உண்டு. அழியா வரம் பெற்ற தியாகையர் இருக்கின்றார். அதேபோன்றவர்கள் முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி. இந்தக்காலத்தில் எங்கள் பாபநாசம்சிவன் இருக்கின்றார். இவர்களுடைய கீர்த்தனம் ஒன்றை வாசித்திருக்கப்படாதா? இனிமேல் இப்படித் தவறு செய்யப்படாது'', என்றேன். ''என்ன செய்யலாம்? சில இரசிகர்களைத் திருப்திப்படுத்த வேண்டும்'', என்றார் அவர். ''உண்மை. அதற்காக எமது தெய்வ வாத்தியத்தின் மரபை மீறப்படாது. இசைமூலம் இறை வனைச் சேவிப்பதே எமது முதற்கடமை'' என மேலும் சொல்லி

வைத்தேன். இந்த ஒன்றே போதும் இசை மரபை விளங்கப் படுத்த. பாபநாசம்சிவனுக்குப் பின் சுத்தானந்தர் போன்ற பெரியார்கள் நிறையக் கீர்த்தனங்களை இயற்றிவருகின்றுர்கள். பெரியசாமித்தூரன் பாராட்டிற்குரியவர். இசையரசு தண்டபாணி தேசிகர் தன் சொந்தக் கீர்த்தனங்களை அப்பன்மேல் பாடி, தன் கச்சேரிகளிலும் அவைகளைச் சேர்த்துள்ளார். புதுமையை விரும்புகின்ற இக்கால வித்துவான்கள் இவைகளைப் பின்பற்ற லாம். இந்தக்காலத்து வித்துவான்களைப்பற்றிச் சொல்லும்போ தெல்லாம் அந்தக்காலத்து நாதசுர வித்துவான்களைப்பற்றியும் குறிப்பிடத்தான்வேண்டும். அந்தக்காலத்தில் மாவிட்டபுரம் குழந்தைவேல், மாவிட்டபுரம் பக்கிரிசாமி, வண்ணுர்பண்ணை அண்ணுச்சாமி போன்றவர்கள் இருந்தனர். பின்னர் மாவிட்ட புரம் உருத்திராபதி, மாவிட்டபுரம் இராசா, வண்ணுர்பண்ணை வைரவநாதன் போன்றவர்கள் இசையுலகில் பேரோடு கிளம்பி ஞர்கள். இவர்கள் எல்லோரும் ஆசாரமானவர்கள். பக்தி உணர்ச்சி நிரம்பியவர்கள். மரபுவழி நின்று சேவிக்கின்றவர்கள். இதனுல் இந்தக்காலத்து வித்துவான்களின் ஞானத்தை நான் மதிக்கவில்லை என்று கருத்தாகாது. இந்தக்காலத்து இளம் வித்துவான்களையிட்டு நான் பெருமைப்படுகிறேன். எமது நாடே பெருமைப்படுகின்றது. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளே இவர்களுக்குக் கௌரவம் அளித்துள்ளது.

'' தவிலுடன் மட்டும் நான் நின்றுவிடவில்லை. இப்பொழுதும் நாதசுரம் வாசிப்பேன். மிருதங்கத்தின்மேற் பிறந்த பெருமதிப்புக் காரணமாக மிருதங்க வித்தையையும் கற்றேன். கச்சேரிகள் பலவற்றிற்கும் மிருதங்கம் வாசித்திருக்கின்றேன். என்னை இன்றும், '' மிருதங்க வித்துவான் ஆறுமுகம் '', என்று அன்புடன் அழைக்கின்ற இரசிகர்கள் பலர் இருக்கின்றனர். ஒன்றுக்கு மேற்பட்ட வாத்தியத்தைப் பழகினுல் வித்தை மேலோங்கும் என்பதில் எனக்குத் தளராத நம்பிக்கையுண்டு. இசையின் நோக்கம் இறைவனைச் சேவித்தல் ''.

'' நீங்கள்தானே பலருக்குச் சிட்சை செய்துள்ளீர்கள். அது பற்றிச் சொல்லுங்கள் பார்க்கலாம் '', என்றேன். தாத்தா சிரித்தார். பின்னர் பேசினுர்.

'' நான் பலருக்குச் சிட்சை சொல்லிக்கொடுத்திருக்கின்றேன். எம்பெருமான் விருப்பம் அதுபோலும். எல்லாம் ஆண்டவன் கட்டளை. என்னிடம் சிட்சை பெற்றவர்களைப்பற்றி நான் அதிகம் பேசவில்லை. அதுபற்றி அவர்களிடம் கேளுங்கள். ஒரு சம்ப

வத்தைச் சொல்லி எல்லாவற்றையும் விளங்கப்படுத்த விரும்பு கின்றேன். இப்பொழுது புகழுடன் விளங்குகின்றவர் தவில் வித்து வான் அளவெட்டி குமரகுரு. இவர் எனது நண்பன் தவில் வித்துவான் நாகலிங்கத்தின் மகன். நாகலிங்கம் எனக்கு வேண்டியவர். ஒருநாள் நவராத்திரி பூசைப்போது மகன் குமர குருவை எனது வீட்டிலே கொண்டுவந்து விட்டார். நோக்கம் எனக்குத் தெரியும். பயலை ஏற்றுக்கொண்டு சரசுவதி பூசைத் தினத்தன்று சிட்சையை ஆரம்பித்தேன். சின்னப் பையன். சொல்லிக்கொடுப்பதை மிகவும் சுலபமாகப் பிடித்துக்கொள் வான். ஒருமுறை சொன்னுற்போதும். அப்படியே செய்து காட்டு வான். பிஞ்சு மனம். வீட்டு எண்ணம் அதிகம். தாய் தந்தையர் மத்தியில் வாழ்வதையே விரும்பினுன். காலையும் மாலையும் சிட்சை ஒழுங்காகப் பெற்ருன். அதன்பின்னர் தெருவிலே வந்து நிற்பான். ''அப்பா வருவாரோ?'', என்று வழிமேல் விழி வைத்து ஏங்குவான். அவனுடைய திறமையைப் பார்த்து மனம் மகிழ்ந்தேன். அவனுடைய தந்தை தாய்ப் பாசம், வீட்டுத்தாகம் என்ற உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்தேன். செப்பமாகப் போதித்தேன்; ஆறுதல் சொல்லி அவனுக்குத் தென்பூட்டினேன். சாதாரணமானவர்கள் பத்து நாளில் பிடிப்பதை இவன் பத்து நிமிடத்தில் பிடித்துவிடுவான். சிட்சைக்கு என்னிடம் ஒப்படைக் கின்ற குழந்தைகளை எனது பிள்ளைகளாகவே மதித்து வருகின்றேன். பிரபல தவில் வித்துவான் வடலியடைப்பு ஜெயராமனும் இப்படித்தான் என்னிடம் கற்றவர். பாடத்தைத் திட்டம்போட்டுப் போதிப்பேன். விபரங்களையெல்லாம் இந்தக் காலத்திற்கு ஏற்ப எனது மாணவர்களுக்குப் பிரதிசெய்தும் கொடுத்துவிட்டேன்.'' என்று பேச்சை அடுக்கிக்கொண்டு போனுர் முதியவர் ஆறுமுகம்.

''அது சரி. உங்கள் மகன் வலங்கைமான் சண்முகசுந்தரத் தைப்பற்றி எதுவும் சொல்லவில்லையே?'', என்று கேள்வியைத் தொடுத்தேன்.

''தம்பி! காரணத்துடன்தான் சொல்லவில்லை. எனது மகன் தான் வலங்கைமான் சண்முகசுந்தரம். நாதசுர வித்துவான்கள் பாலகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன் எனது குழந்தைகள். மிருதங்க வித்துவான்கள் சந்தானகிருஷ்ணன், முத்துக்கிருஷ்ணன் ஆகியோ ரும் எனது குழந்தைகள். இவர்களின் புகழுக்கு இரசிகர்களின் ஆதரவே சான்று. ''தன்பெருமை சொல்லியே தன்னைப்புகழ்ந்த பதர்'', என்ற நிலைக்கு ஆளாகப்படாது. மகன் சண்முகசுந்தரம் பற்றி இசையுலகம் நன்கு அறிந்துள்ளது. எனது மருமகன்

வி. தெட்சணாமூர்த்தி பற்றிக் கூற விரும்புகின்றேன். என்னிடம் சிட்சைபெறவில்லை, இடையிடையே என்னிடம் வருவான். ''மாமா! இதை எப்படிச் செய்யலாம்?'' என்பான். ஏதாவது சொல்வேன். செய்துகாட்டத் தேவையில்லை. அடுத்த கச்சேரியில் அப்படியே அதனைச் செய்து காட்டிவிடுவான். அப்படி வித்தை கற்று வருவதில்லை. பூர்வபுண்ணியம் அது; சிவ சிவா. இந்தக் காலத்து இரசிகர்களின் ஆதரவு வெள்ளம்போலப் பெருகிக் கொண்டு வருகின்றது. அதற்குக் குறைவேயில்லை. அது ஒரு போதும் குறையக்கூடாது. குறையவும் மாட்டாது. ஈழத்து இசை வளர்ச்சி வரலாற்றில் எமது இசைப்பரம்பரை முக்கியமான பங்கைப் பெற்றுள்ளது. எமது இளம் வித்துவான்கள் எல்லோ ரும் மரபுவழி மாருது சிட்சை பெற்றவர்கள். இரசிகர்களின் ஞானம் வளர்ந்துகொண்டே போகின்றது. எனது நல்வாழ்க்கைக் கும், நீண்ட ஆயுளுக்கும் என் கலைவாழ்க்கைதான் காரணம். கலைப் பொலிவுதான் என் வாழ்க்கைப் பொலிவு. சிதம்பரநாதா! குருவே துணை'', என்ருர்.

''நீங்கள் மறக்கமுடியாத நிகழ்ச்சி எது?'', என்றேன்.

''பலவற்றைச் சொல்லலாம். இருங்கள் தம்பி. ஒன்றைக் குறிப்பிடலாம். அது என் மனதை விட்டு அகலாது. மூளாய்ப் பிள்ளையார் கோயில் திருவிழா நடந்துகொண்டிருந்தது. எந்த ஆண்டு என்பது நினைவில்லை. திருமுல்லைவாசல் முத்துவீர் வித்துவானைப்பற்றி முன்னர் குறிப்பிட்டுள்ளேன். மூளாயில் சிறந்த கலாரசிகர் மயில்வாகனச் சட்டம்பியார் இருந்தார். முத்துவீர் வித்துவானையும் என்னையும் சேர்த்துத் தவில் கச்சேரிக்கு ஒழுங்கு செய்தார். ஈழத்து வித்துவான் சோழத்து வித்துவானுடன் தவில் வாசிக்கப்போகின்ருர் என்று துண்டுப் பிரசுரங்களும் அடித்துவிட்டார். திருவிழாவின்போது சுவாமி உலாவந்தார். கிழக்கு வீதியில் சுவாமி வரும்போதே இரசிகர் களின் ஆரவாரம் பொங்கியது. வழமையாகத் தவில் கச்சேரி வடக்கு வீதியில் நடைபெறும். இதற்கு மாருக இரசிகர்களின் வேண்டுகோளின்படி தெற்கு வீதியிலே தவில் கச்சேரி தொடங் கியது. முத்துவீர் வாசிக்கத் தொடங்கினுர். நான் மூன்ருவதாக நின்றேன். பரபரப்பாகக் கச்சேரி நடந்தது. இரசிகர்கள் என்மீது உண்மையிலே பூமாரி சொரிந்தார்கள். கூடையுடன் பூக்களை வாரி இறைத்தனர். கச்சேரி இனிது முடிவுபெற்றது. முத்துவீர் என்னைக் கட்டித்தழுவிப் பாராட்டினுர். மயில்வாகனச் சட்டம்பி யார், முத்துவீரைப் பார்த்து ''எங்கள் ஈழத்து வித்துவான் ஆறுமுகத்தைப்பற்றி என்ன சொல்லுகின்றீர்கள்?'', என்ருர்.

108
EVELYN RUTNAM INSTITUTE REFERENCE LIBRARY JAFFNA

முத்துவீர் சிரித்தார். "சொல்ல என்ன இருக்கின்றது. முதலாவதாக நின்று வாசித்தேன். உங்கள் வித்துவான் மூன்றாவதாக நின்றார். நான் தவறவிட்ட அட்சரத்தை வருவித்து எடுத்து வாசித்துக் காட்டிவிட்டார் இவர். இவரின் வித்தைக்கு வேறு எந்தப் புகழ்மாலையும் வேண்டாம் என்றார்." மயில்வாகனச் சட்டம்பியாரும் விட்டுக்கொடுக்காமல், "இவர் பரம்பரையே வித்துவப் பரம்பரை. இவரின் தகப்பனார் வைத்திலிங்கம், பெரும் தவில் வித்துவான். தகப்பனாரின் தகப்பனார் ஆறுமுகம். அவரும் தவிலிலே புலி. இவருக்கும் பாட்டனாரின் பெயரையே வைத்தார்கள். ஆறுமுகம் நீடூழி வாழத் தங்கக் கணபதி அருள் தொடர்ந்து கிட்டுவதாக!" என்று வாழ்த்தினார். "இன்னும் ஒன்று. எனது மகன் சண்முகசுந்தரத்திற்கு முதற்குரு நான்; ஆனால் அவன் இராகவபிள்ளையிடம் சென்று சிட்சைபெற்றது எமது பாக்கியம். என்னிடம் கற்றதை மகன் சண்முகம் மேலும் வளர்த்துக்கொண்டான். சிவம்", என்று தாத்தா ஆறுமுகம் தன் பேச்சை முடித்தார். கலைப்பூஞ்சோலை ஒன்றுக்குச் சென்று நறுமணத்தைச் சுவைத்த இன்பத்துடன் நாம் வீடு திரும்பினோம்.

※ ※ ※

இப்பொழுது புகழுடன் விளங்குகின்ற தவில் மேதை வலங்கைமான் சண்முகசுந்தரம், அப்பொழுது யாழ்ப்பாணத்து மூளாய் சண்முகசுந்தரம். சிறு பையன் சிட்சைக்காகத் தன் குருநாதர் இராகவபிள்ளையிடம் போயிருந்தார். கள்ளம் கபடம் தெரியாத பையன். மிகவும் ஆடம்பரமாகத் தன் குருநாதர் முன்பாக ஓடியாடித் திரிவான். இராகவபிள்ளையிடம் வந்த நண்பர் ஒருவர் வினவினார்:

"யார் பையன்?"

"இவன் யாழ்ப்பாணத்துப் பையன். சிட்சைக்கு வந்திருக்கின்றான்", என்றார் தவிற்கலைத் தனிப்பேராசான் இராகவபிள்ளை,

இளம் சண்முகசுந்தரத்தின் ஆடம்பரமான போக்கை விரும்பாத நண்பர், "உங்களுக்குச் சொல்லிக்கொடுக்கவோ?", என்றார் கிண்டலாக.

"தங்கமான பையன். இந்தப் பையன் வாசிப்பதைக் கேட்டால் அந்தநிலை வந்தாலும் வரும்", என்றார் இராகவபிள்ளை. அந்த உரை இன்று வீண்போகவில்லை. மூளாய் சண்முகசுந்தரம் இன்று வலங்கைமானாகிவிட்டார். அவரின் புகழ் இசை உலகில் நிலைத்துவிட்டது.

※

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA